எழுத்து

82

எழுத்தாளனும் சட்டை உரிப்பும் 166
தலையங்கம்

தமிழன் சிந்திக்க 167
சி. சு. செ.

சோடைபோன சர்ச்சை 169
சு. சங்கரசுப்ரமண்யன்

நாடகத்திற்கு ஒரு தனிக்கொடி 171
சித்திரபாரதி

சுவையான தகவல்கள் 172

சங்க மரபில் ஒரு அகப்பாட்டு 173
சி. கனகசபாபதி

என்ன பசியோ? 175
த. நா. சுவாமிநாதன்

விமர்சனமும் இலக்கியமே 176
மு. பழனிசாமி

அழைப்பு 179
வீர வேலுசாமி

எங்கோ மழை ? 179
தி. சோ. வேணுகோபாலன்

ஒரு கூடை ஏடுகள் ! 180
சு. ச

யார் துணை ? 182
கி. முத்துசாமி

ஐரிஷ் வானவீரன் தன் சாவைக் காண்கிறான் 184
டப்ளியு. பி. யேட்ஸ்

ஒளிக்கு ஒரு இரவு 184
தர்மு சிவராமு

அன்று சொன்னது இன்றைக்கும்— 186

ஏழாம் ஆண்டு

50 பைசா ஆசிரியர்: சி. சு. செல்லப்பா அக்டோபர் 65

7-ம் ஆண்டு
ஏடு 82
அக்டோபர்
1965

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஒரு ஆண்டு சந்தா ரூ. 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 7-00 சந்தா கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (EZHUTTHU) 19 A. பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி சென்னை-5 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

தலையங்கம்

எழுத்தாளனும் சட்டை உரிப்பும்

சென்ற ஏடு வெளிவந்து இந்த ஏடு வருமுன் உள்ள ஒருமாத இடைக் காலத்திலே நமது தலை முறையிலே இதுவரைக்காணாத ஒரு போரிலே இறங்கி இருக்கிறது நம் பாரதநாடு. அன்பும் அஹிம்சையும் விற்று'வந்த நம் மண்ணிலே புதுக் கவிதை முதல்வர் ந. பிச்சமூர்த்தி சென்ற உலகப் போரைப் பற்றி

'சூலம் எழுந்தது
அண்டம் அதிர்ந்தது
உலகெங்கும் கூடாரம்
ஊரெங்கும் விஷப்புகை
வானெங்கும் எஃகிற்கு
தெரு வெங்கும் பிணமலை
பீரங்கிக் குரல் பேச'

என்று அன்றய உலக நிலையை போர் கோரத்தை பாடினமாதிரி, நம் நகரங்களிலே, கிராமங்களிலே, குண்டுவீச்சும் பீரங்கிச் சூடுகையும் பார்த்து விட்டோம் முதல் தடவையாக. பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் உடல் சிதைந்ததை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆஸ்பத்திரிகள், கோவில்கள் சர்சுகள் மசூதிகள் தரைமட்ட மானதையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். லண்டனுக்கும் பெர்லினுக்கும் ஹிரோஷீமாவுக்கும், ஸ்டாலின்கிராடுக்கும் பாரிஸுக்கும் ரோமுக்கும் இவை புதிதல்ல. பாரதத்துக்கு இது புதுசுதான், புது அனுபவம் தான் பயங்கர அனுபவம்தான். எதிர்பார்த்தே இராத அனுபமும்தான். இருந்தாலும் இந்த அனுபவத்துக்கு பாரதம் ஈடுகொடுக்க முடியும் என்பதை காட்டிக் கொண்டு விட்டது. மனம் விடாமல் சிதறாமல் தாங்கிக் கொள்ள முடியும் என்பதையும் நிரூபித்து விட்டது, பாரதம் இனி எந்த சோதனையையும்சமாளிக்கும் என்று நமது ஜவான்கள் நமக்கு காட்டி இருப்பதை நாமும் உணர்ந்து கொண்டு விட்டோம். ஆனால் ஜவான்கள் செய்யட்டும் என்று இருந்துவிட முடியாது. நாம், நாற்பத்தேழு கோடியும் ஜவானாக ஆகிவிட்ட நிலையில் தான் நிலையான அமைதியான வாழ்வு பாரதத்துக்கு என்றைக்குமாக சித்திக்கும்.

'சுடுதலும் குளிரும் உயிர்க் கில்லை, சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை. எடுமினோ அறப்போரினை' என்று காந்தி கூறியதை பாரதி பாடினானே. அந்த மந்திரச் சொல்லே இன்று நமக்கு நாற்பத்தேழு கோடிமக்களுக்கு தாரகமந்திரம். இன்று நாம் நடத்துவதும் அறப்போர்தான். நூற்றுக்கணக்கான நம் பொது மக்கள் கருக்கப்பட்டும் ஒரு எதிரி நாட்டு மதலையை நாம்தீய்க்கவில்லையே. சென்னையில் சமீபத்தில் நடந்த எழுத்தாளர் பேரணிக் கூட்டத்தில் மு. வரதராசனார் சொன்னது போல அது காந்திமகான் தந்த பண்பாடு. ஆனால் இந்த பண்பாட்டை, எதிரி நாடு ரொம்பவும் சோதிக்குமானால்—? தன் வினைப்பயனை அது அநுபவித்தே ஆகவேண்டும் என்பதும் உறுதி. ஏதோ தாற்காலிகமான ஒரு ஏற்பாட்டுக்கே தூவானம் விடவில்லையே. நிரந்தர அமைதிக்கு அதுவா விடப்போகிறது என்ற சந்தேகத்திலே தான் இந்த சுடுகைநிறுத்தநாட்களை கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம். குருடனுக்கு கண்தான்வேண்டும். நமக்கு சமாதானம் வேண்டும். அதுவும் கவுரவத்துடன். ஒருபக்கச் சார்புடன் இன்று சதுரங்கம் ஆடும் மேற்கத்திய வல்லரசுகள் இதை செய்ய முடிகிறதா,பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் கேள்விகுறியாகவே இருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக்கொள்வோம். எழுந்து விட்ட பாரதம் இனி இந்த உலுக்கலுக்கு பிறகு தூணில் சாய்ந்து கொள்ளப் போய்விடக்கூடாது.

இதுக்கு எழுத்தாளர் பங்கு என்ன ? அது தான் அவன் முன் இன்று முளைத்துள்ள கேள்வி. அதைப்பற்றிதான் சென்னையில் எழுத்தாளர் சங்கங்கள் சார்பாக ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. 'சுட்டபோர் நின்றுவிட்டது சுடாத போர் நடக்கிறது என்று ராஜதந்திர பேச்சுபற்றி எச்சரிக்கைபடுத்தினர் எ.ஜி.வெங்கடாச்சாரியார். 'எழுத்துலகமும் கலையுலகமும் அகத்துறையை கொஞ்சம் ஒதுக்கிவைத்து புறத்துறையை சித்தரிக்கவேண்டும்' என்றார் எஸ். டி. சுந்தரம் எழுத்தாளன் மனிதனை தெய்வமாகவும் ஆக்கலாம் அசுரனாகவும் ஆக்கலாம். அவன் இதில் எதைச் செய்வது என்று தேர்ந்தெடுக்க வேண்டும் என்றார் வசுமதி ராமசாமி. இதெல்லாம் எழுத்தாளருக்கு இயல்பாக இருக்க வேண்டிய குறிக்கோள்கள் என்பதை யாரும் பொதுப்படையாக ஒத்துக் கொள்வார்கள். இன்று விசேஷமாக இருக்க வேண்டு மென்பதில்தான் அழுத்தம்.

இந்த அழுத்தம் பற்றி பேசுகிறபோதுதான் 1930-க்கள் காலத்தைப்பற்றி நினைத்துப் பேசு

(187-ஆம் பக்கம் பார்க்க)

தமிழன் சிந்திக்க

1 OCT 1965
MADRAS

சி. சு. செ.

சென்ற ஒரு மாத காலமாக நம் நாட்டின் அமைதி வாழ்வு கிழிபட்டுப் போய்விட்டது. நூற்றுண்டுக்கள் கால அடிமை வாழ்வுக்குப்பின், மீட்சிக்கு வகை செய்த அகிம்சா நாயகனின் சுமார் முப்பது ஆண்டுப் போர்க்காலம்கூட இன்னும் நம் மனக்கண் என்ன, முகக் கண்ணிலிருந்தும்கூட மங்கவில்லை. அவன் வாங்கித் தந்த சுதந்திரத்தை அவன் தன் வழிநடத்தி வளம்பெறச் செய்யும் ஒரு நாளுக்கு நாம் கொடுத்துவைக்கவில்லை. 'காந்தி இருந்தால்– ?' என்று நினைவு அசை போட்டு சபலம் காட்டிக் கொள்வதுக்குமேல் எதுவும் செய்ய இயலவில்லை. ஆனாலும் பெற்றதை அணைத்துப் பேணினோம். வளர்த்து வந்தோம். தாய்ப் பாலுக்கு மாற்றாக சிறிய தாயார்கள் பாலுண்டு உருவாகி வருகிறது நம் பாரதநாடு. பதினேழே ஆண்டுகள்தான் ஆகி இருக்கிறது; கால் நூற்றுண்டுகூட ஆகவில்லை. அதுக்குள்ளே அன்று பாரதி புழுங்கினானே அடிமை இந்தியாவில்—

தண்ணீர்விட்டே வளர்த்தோம்?
சர்வேசா? இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்
கருகத்திருவுளமோ?

எண்ணமெல்லாம் நெய்யாக
எம்முயிரினுள் வளர்ந்த
வண்ண விளக்கிஃது
மடியத்திருவுளமோ?

ஓராயிரம் வருடம்
ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராதுபோல் வந்த
மாமணியைத் தோற்போமோ?

தர்மமே வெல்லுமெனுஞ்
சான்றோர்சொற் பொய்யாமோ
கர்மவிளைவுகள் யாங்
கண்டதெலாம் போதாதோ?

இன்பச் சுதந்திர நின்
இன்னருளாற் பெற்றதன்றோ
அன்பற்ற மாக்கள்
அதைப் பறித்தாற் காவாயோ?

நீயும் அறமும்
நிலைத்திருத்தல் மெய்யானால்
ஓயுமுன் எங்களுக்கிவ்
வோர் வர நீ நல்குதியே.

அந்த கவி வாக்கை இன்று மந்திரச் சொல்லாக நாம் நம் நெஞ்சிலே, ஒரு அதிர்ச்சி நிலையில் நினைத்து நினைத்து சொல்லிக் கொள்ள ஏற்பட்டு இருக்கிறது சுதந்திர இந்தியாவில்! இது நாம் எதிர்பார்த்ததா, எதிர்பாராது வந்ததா? நாம் வருவித்துக் கொண்டதா, அதுவாக வந்ததா? காரண காரியங்களை ஆராய்வதும் அவசியம்தானே. ஆனால் அதைவிட, ஏற்பட்டுவிட்ட நிலைக்கு ஈடு கொடுப்பதே அவசரமான உடனடியான காரியம். இந்த இரண்டு சம்பந்தமாகவும் நாம் சிந்திக்க வேண்டிய வற்புறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இந்த பதினேழு ஆண்டுகளாக நாம் செயல்பட்டு வந்த விதத்தை, போக்கை, வாழ்ந்த வாழ்வை, புனர் மதிப்பீடு செய்யவேண்டிய கட்டம் வந்துவிட்டது.

ஒரு சிறு கேள்வி போட்டுக்கொள்வோம். ஒரு ஆறு ஆண்டு யுத்தம் (1939–45) முடிந்து இந்த இருபது வருஷ காலத்தில் நடந்திருப்பதை நாம் பார்ப்போம். போர் முடிவில் ஜனநாயகம் வென்று, இருந்த சுதந்திரத்தை காப்பாற்றிக் கொண்ட நாடுகள். போரில் இழந்த சுதந்திரத்தை திரும்பப் பெற்ற நாடுகள், நூற்றுண்டுகளாக அடிமையாக இருந்து சுதந்திரம் திரும்பக் கிடைத்த நாடுகள், அடிமையும் இல்லை, சுதந்திரமும் இல்லை என்ற நிலையில் இருந்து வந்து சுதந்திர நாடுகளாக உருவான புதிய பிரதேசங்கள், உள்நாட்டிலே புரட்சி ஏற்பட்டு மக்கள் நலனுக்கான அரசாங்கம் நிலைக்கப்பெற்ற நாடுகள் இம்தெல்லாம் இந்த இருபது ஆண்டுக் காலத்தில் நாம் கண்டவை. இத்தனைக்கும் இடையே சுதந்திரமாகவே இருந்து வந்து தன் சுதந்திரத்தை இழந்த ஒரு நாட்டையும் பார்த்தோம். உலகம் வாய்மூடி மவுனியாக இருந்தது இதுக்கு மட்டும்.

அது எதைக் காட்டியது, எதை ஊட்டியது? அது காட்டியது எவன்பாடோ நமக்கென்ன என்று ஆட்டை ஓநாய் குதறியதை பார்த்துக் கொண்டிருந்த 'ரசிக' மனப்பான்மையை! அது ஊட்டியது 'ஆட்டை கடித்து மாட்டைக் கடித்து மணியாரனையும் கடித்த' கதையாக. தன் பசிக்கு யானையையும் விழுங்கலாம் என்ற பேராசையை! இதெல்லாம் உலகம் சம்பந்தமாக, பொதுவாக.

சென்ற உலக யுத்தத்தின் விளைவாக உலகத்தில் இன்னொரு முக்கியமான அபாயகரமான விஷ விளைச்சல் ஏற்பட்டதையும் நாம் பார்க்கிறோம். ஒரே நாடு, ஒரே ஜனசமூகம் என்று இருந்தது போக ஒரே உடலை இரண்டாக்கின காரியங்களையும் பார்த்தோம். நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன் அயர்லாந்து சுதந்திரப் போர் செய்து பெற்ற போது ராஜதந்திரம் அதை இரண்டாக பிரித்துவிட்டது. இன்றுவரை ஒன்றுசேர இயலவில்லை, ஏன், இனி வாய்ப்பே இல்லை. ஒரே மண்தான். மண் மாறவில்லை; மனம் வேறுபட்டுவிட்டது.

அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஒரு ராஜ தந்திர விஷம் ஜெர்மனி, கொரியா, வியட்நாம் இப்படி இனத்தை சிதைத்து, மண்ணை கெடுத்து, மனசை கசப்பாக்கி ஒரு நிலையான புதிய விஷ சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன.

எங்கேயோ நடந்ததெல்லாம் நமக்கும் வந்தது. அதே ராஜதந்திரம் வென்றது. இந்தியா—பாகிஸ்தான். மனக் கசப்புடனேதான் ஏற்றுக் கொண்டோம் சரியா தப்பா என்று இன்று ஆராயவேண்டாம் நடந்துவிட்டது. மக்கள் இடம் மாறினோம். மண் மாறினோம்; மனம் மாறினோம். குணம் மாறினோம். அதிலே எதெதையோ மறந்தோம், கைவிட்டோம். பிறகு விஷ ராஜ தந்திரத்துக்கு இன்னொரு வெற்றியும் கிடைத்தது. காஷ்மீரம் பிரிக்கப்பட்டது. ஆனால் மற்றதுக்கும் இதுக்கும் வித்யாசம், காவல் நாயின் வாயிலே ஒரு பணியாரத்தின் ஒரு பகுதியை கொள்ளை நாய் வாயால் கவ்விக்கொண்டு முழுவதையும் காவல் நாயிடமிருந்து தட்டிப் பறிக்க முஸ்தீப்புடன் நிற்கிற நிலை. காவல் நாய் பணியாரத்தையும் விடாமல் கொள்ளை நாயையும் விரட்ட வேண்டியநிலை.

சுருக்கமாக நமது இன்றய நிலமை இது தான். நான் அரசியல் கட்டுரை எழுதவரவில்லை. கட்சி வாதம் பேசவும் வரவில்லை. கொள்கைப் போராட்டம்— அதுவும் நான் விரும்பவில்லை. தனி மனிதனாக சிந்திக்கிறவன், கட்சி நோக்கில் இல்லை. சொல்லப் போனால் இன்றய கட்சிகள் எதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒன்றில் மட்டும் வெகு காலம் இருந்த நம்பிக்கையையும் இழந்தவன். ஆகவே இப்போதைக்கு நான் ஒரு பாரத நாட்டு பிரஜை, தமிழ் நாட்டு மனிதன் என்றஒரே நினைப்பில்தான் இருக்க விரும்புகிறேன். அன்று 1920 முதல், எனக்கு விவரம் தெரிய வந்த வயது முதல் 1948 வரை இந்த ஒரே நினைப்பில் தான் பாரதம் முழுவதும் முனைத்து இருந்தது. இன்று 1948 விருந்து பதினேழு ஆண்டுகளுக்குப் பின், அந்த ஒரே நினைப்புதான் இன்றும் இருக்க வேண்டும். அது ஒன்றே போதும் எதையும் சாதிக்க. அன்று சாதித்ததை இன்றும் சாதிக்க முடியும். மேல் கட்டிடம் மாறி இருக்கலாம், அடித்தளம் மாறிவிடவில்லை. உலக நடப்பை பார்ப்போம் மீண்டும்.

சென்ற யுத்தம் விளைத்த அழிவை நாம் பார்த்தவர்கள். குடும்பம், கிராமம், நாடு எல்லாமே எப்படி அழிந்தன! இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு எழுந்திருக்கவே முடியாதுபோல் தோன்றின தேசங்கள், ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ், போலந்து, பிரிட்டன் போன்ற நாடுகள் இந்த இருபது ஆண்டுக் காலத்திலே, ஊர்கள் உருவாகி, தொழில் வளர்ந்து—எல்லாம் புது ஆரம்பமாக ஏற்பட்டு—இன்று மக்கள் சுகமாக வாழ்கிற தேசங்களாக எப்படி ஆகிவிட்டன! இவைகளை பார்த்த, பார்க்கிறவர்கள்தானே நாம். ஆள், பொருள் சேதம் பெற்ற அமெரிக்கா, ரஷ்யா இரண்டும் உலகில் இரு நேர் எதிர் சக்திகளாக உலகையே இரண்டு கூறுகளாக ஆக்கிவிட்ட வெவ்வேறு கொள்கை நாடுகளாக, உலகத்தின் கதியே அவர்கள் கையில்தான் இருப்பதாக நினைக்கச் செய்யும் உலக 'ரக்ஷகர்'களாக இன்று எல்லைக் கோட்டில் நின்று பலப்பரீட்சை நடத்தி, மற்ற நாடுகளை சதுரங்கக் காய்களாக நகர்த்தி ஆடிவருவதையும் பார்க்கிறோம். உள்நாட்டுச் சீரழிவால் ஆண்டுக் கணக்காய் உள்நாட்டுப் போர் நடந்து மார்க்ஸிய சித்தாந்தத்தின் அடிப்படையில் தன் மக்களுக்கு ஒரு நல்லது செய்யும் அரசியலமைப்பு அமைத்துவிட்டு 'புதுப் பணக்காரனாக, பண்பாடு, மனிதாபிமானம் மறந்து விலங்காக மாறி நாடு பிடி ஆசையாலோ, கொள்கை பரப்பு நோக்கத்தாலோ, அல்லது ஜனத்தொகை பெருக்க பசி வெறியாலோ கொள்கைக்கு மூலதேசமான இன்று நிதானம் பெற்றுள்ள ரஷ்யாவையும் துச்சமாக உதறி, குட்டி பதினாறடியாக அண்டையர்மேல் பாயும் சீனாவும் இன்று அணு ஆயுதம் தயாரிக்க முற்படும் அளவுக்கு வளர்ந்து இருப்பதையும் பார்க்கிறவர்கள்தானே நாம்.

நான் கேட்கிறேன், அல்லது கேட்டுக்கொள்கிறேன். இந்த பதினேழு வருஷத்திலே நாம்—?

குறை, நிறைகளை வாய்விட்டுப் யோசித்துத் தான்ஆகவேண்டும்முதலில்நிறையைப்பார்போம். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் அஸ்தமித்துப்போனதான மனப்பான்மை கூடாது. அது இல்லாமல் பேசுகிறேன். நாம் வளர்ந்தே இருக்கிறோம். ஒரு விதத்தில் மட்டும் இல்லை; பலவிதங்களில். எதுக்கும் வெளிநாட்டை நம்பி இருக்கும் நிலமை பெரிதும் மாறி இருக்கிறது. எனக்குத் தெரியும் குண்டூசிகூட நம்மால் செய்ய முடியவில்லையே என்று ஏங்கிப் பேசிக்கொண்ட நாட்களை நமது ஊரில் பப்பர்மிண்டு செய்கிறவரையில் பப்பர்மிண்ட், பிஸ்கட் இத்யாதிகளை தொட்டே பார்க்காமல் இருந்த பள்ளிச் சிறுவன், கலாசாலை மாணவன் நான். பேனா 'நிப்'பைவிட இறகுப் பேனாவால் எழுத ஆசைப்பட்ட, எழுதிய பள்ளிச் சிறுவன் நான். சுதேசியம் மூச்சாக இருந்த நாட்களை இன்றும் என்னால் அசைபோட முடிகிறது. ஆகவே இன்று கடையில் எதிலும் நம் இந்திய முத்திரை சாமான்களை பார்க்கிற மகிழ்ச்சி எனக்கு இருக்கிறது. விசேஷ தேவைக்காக வெளிநாட்டுத் தயாரிப்பை தேடி அலைந்து கிடைக்காமல் ஏமாறும் அளவுக்கு ஏற்பட்டநிலை இன்று.இது தொழில்துறையில்.

நீரே கண்டிராத இடங்களுக்கு நீர்ப்பாசனம், மண்ணெண்ணை விளக்குகூட கண்டிராத கிராமங்களுக்கு மின்சார வெளிச்சம், ஒற்றையடிப் பாதையே இராத ஊர்களுக்கும் தார் ரோடு, நடை தவிர ஒற்றை மாட்டு வண்டியே போகாத இடங்களுக்கு பஸ் போக்குவரத்து, கம்பு, கேப்பையே சாப்பிட முடிந்தவர்களுக்கு நல்ல அரிசி சாப்பாடு இதெல்லாம் பார்க்கிறோம். கண்ணிருந்

(185-ஆம் பக்கம் பார்க்க)

சோடைபோன சர்ச்சை

சு. சங்கரசுப்ரமண்யன்

‘சுவையான சர்ச்சைகள்’ என்ற தலைப்பில், பல்வேறு பிரச்னைகளைப்பற்றிய இருதரப்பு வாதங்களை, சம்பந்தப்பட்டவர்கள் வாயிலாகவே ‘கல்கி’ ஏடு தற்சமயம் வழங்கி வருகிறது. ஒண்டுக் குடித்தனம் பற்றியும், ஹோட்டல் சாப்பாடு பற்றியும் கவனம் செலுத்தியவர்கள் இலக்கியத்தின் பக்கமும் திரும்பிப் பார்த்திருப்பது வரவேற்கத்தக்க விஷயம் தான். இதிலிருந்து, இன்றைய இலக்கியத்தின் போக்கும் ஒண்டுக் குடித்தனம் போல ‘நெருக்கடி’ மிகுந்ததாகவும், ஹோட்டல் சாப்பாட்டைப் போல ‘இயந்திர ருசி’ படைத்ததாகவும் இருப்பதாக யாராவது எண்ணினால் நிச்சயம் ‘கல்கி’ பொறுப்பல்ல.

விஷயத்திலுள்ள விசேஷம், கல்கியின் கடைக்கண் வீச்சு. எடுத்த எடுப்பிலேயே இலக்கியத்தின் அநேக துறைகளையும் தாண்டி, விமரிசனத்தின் மீது விழுந்திருப்பதில் தான் அடங்கி இருக்கிறது. ‘இன்றைய தமிழ் எழுத்தாளர்களின் சிருஷ்டிகளுக்குச் சரியான விமர்சனம் உண்டா’ ; என்பது சர்ச்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கதி. ‘தமிழிலே விமர்சனமே இல்லை’ என்றும் ‘விமர்சனம் செய்கிற அளவுக்குச் சிருஷ்டிகளே தோன்றவில்லை’ என்றும் பலவிதமாகப் பேசி தங்கள் பயத்தைத் தீர்த்துக் கொண்டிருந்த எழுத்தாளர்களின் வாயை அடக்குகிற மாதிரி விமர்சனத்தை ஒப்புக்கொண்டு, சர்ச்சைக் கேற்ற விஷயமாகத் தேர்ந்தெடுத்த வரைக்கும் கல்கிக்கு நன்றி செலுத்தத் தான் வேண்டும்.

‘மாதவருமானம் கட்டி வருகிறதா’, ‘எத்தனை நாட்களாக இந்த உத்தியோகம்’ போன்ற பத்துக் கேள்விகளுக்கு நடுவே ‘தமிழிலே விமர்சகர்கள் இருக்கிறார்களா’ என்ற கேள்வியையும் எழுத்தாளர் ஒருவரிடம் போட்டு வைத்த விகடனும், இன்று சர்ச்சையைக் கிளப்பி விட்ட கல்கியும் மறைமுகமாக விமர்சன உணர்வை வளர்த்த பெருமைக்கு ஆளாகிறார்கள் என்பதை மறைக்கத் தேவையில்லை.

பேட்டிக்காக தகவல் அளிப்பது வேறு, கேள்விக்குப் பதில் என்ற முறையில் அபிப்ராயம் வழங்குவது வேறு, விவாதத்தில் ஒரு கட்சியை எடுத்து, தொடுத்து முடிப்பது வேறு. கல்கியின் சர்ச்சை மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தது. இந்த அடிப்படையை ஹோட்டல் முதலாளியும், ஹோட்டல் சாப்பாட்டுக்காரரும், வீட்டுச் சொந்தக்காரரும், ஒண்டுக் குடித்தனக்காரரும் புரிந்து கொண்ட அளவுக்கு, எழுத்தையே தொழிலாகக் கொண்ட இருவர் புரிந்து கொள்ளவில்லை என்பதை சுட்டிக் காட்டும்போது பேனாவுக்குப் பெருமையில்லை என்றாலும், மையைக் கொட்டியாவது இந்த உண்மையை முதலில் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

மீண்டும் நினைப்பூட்டிக் கொள்வோம்— ‘சிருஷ்டிகளுக்குச் சரியான விமர்சனம் உண்டா’ என்பது கேள்வி. ‘இல்லை’ என்பதற்கும், ‘உண்டு’ என்பதற்கும் இரண்டு கட்சிகள். இதெல்லாம் கல்கி சொல்லுவது தான். பின், சர்ச்சையின் முழுப்போக்கும் சிருஷ்டிகளைப் பற்றியும், விமர்சனத்தைச் சுற்றியும் இயங்கும்என எதிர்பார்ப்பது பொது வாசகனின் நியாயமான, இயல்பான உரிமை. ஆனால், நடந்திருப்பது அந்த ரீதியில் அல்ல. ஒரு பெரிய விருந்துச் சாப்பாட்டுக்குப் பண்டங்கள் தயாரிக்கும் சிரமத்துடன் தம் எண்ணத்துக்கு எழுத்துருவம்கொடுக்கும்’ எழுத்தாளர் ஒருவரும், ‘வெற்றிலைப் புகையிலை வழக்கம்’ இல்லாத விமர்சகர் ஒருவரும் கல்யாண வீட்டிலோ அல்லது கடைத்தெருவிலோ சந்திக்க ஏற்பட்டு, தங்களுக்குள் பரஸ்பரம் பேசிக் கொண்டது தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. ‘ஏசிக் கொண்டது’ என்றாலும் குற்றம் இல்லை. ‘தமக்குப் பிராபல்யம் தேடிக்கொள்ள முயற்சி செய்கிறார்’ என்று எழுத்தாளரும் ‘கடித்து விழுங்கும் அசைவ உணர்ச்சிக்கு இடமாகும் பல எழுத்தாளர்களில் அவரும் ஒருவர் தானே’ என்று விமர்சகரும் ‘பேசுவது’ வேறு என்னவாம்?

எழுத்தாளர்களின் கட்சிக்கு, சமீபகாலங்களில் அதிகம் எழுதாத ‘ரஸவாதி’யும், விமர்சகர்களின் கட்சிக்கு ‘விமர்சனத்தில் நம்பிக்கை இல்லாததாகச் சொல்லிக் கொள்ளும் க. நா. சுப்ரமண்யமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதே கல்கியின் சாமர்த்தியத்தைப் பளிச்சிட்டுக் காட்டுகிறது. சர்ச்சையின் மூலம் ஒரு தெளிவை உண்டு பண்ணாமல், வெறும் மோதலைக் காட்ட விரும்பினார்கள் போலும். ‘சுவையான’ சர்ச்சை அல்லவா? அப்படித்தான் இருக்கும்.

‘விமர்சகர்’ என்றால் க. நா. சு. ஒருவர் தான் என்ற முடிவில் நெற்றிக் கண்ணைத் திறந்திருக்கிறார் ரஸவாதி. (அவர்தான் க. நா. சு. வை நக்கீரர் என்கிறார்.) விமர்சனத்துக்குக் கெட்ட பெயரிட்டுத் தூக்கிலிட இதுதான் சுலபமானவழி. தனி நபரை மறந்து, விமர்சனம் என்கிற துறையின் தோற்றத்தை, வீச்சை, வியாபகத்தை மதித்து உணர்ந்து. அப்புறம் அதன் நிறை குறைகளைத் தொட்டுக் காண்பித்தால் சர்ச்சையில், தன் பக்கம் வலுவடையும். ‘அழிப்பு விமர்சனம்’ என்று பட்டம் சூட்டுகிறவர் விமர்சனத்தை ஆக்க ரீதியில் அணுகக் காணோமே. ‘கண்களில் அகப்பட்டதைத் துவம்சம் செய்து கண்களுக்கு அகப்படாத ஒன்றைப் போற்றி புகழ முனையும் சிலர்’

என்று விமர்சகர்களைப் பற்றி வர்ணிக்கிற ரஸவாதி கண்களை மூடிக்கொண்டு விமர்சனத்தையும் விமர்சகர்களையும் துவம்சம் செய்ததைஎப்படி ஏற்கமுடியும்? போக்குவரத்துப் போலீஸ் காவலருக்கு இன்றைய விமர்சகரை (ஒன்றிரண்டு பேர் இருப்பதாக ஒப்புக் கொண்ட பெரிய மனசுக்குப் பாராட்டு) ஒப்பிடுகிறார் ரஸவாதி. சரியான பாதையில் திருப்பாமல், தாங்கள் விரும்பும் பாதையில் திருப்பும் போலீஸ் காவலரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். காவலர் வேலை என்ன ஐயா? வண்டி யோட்டிகள் விரும்புகிறபடி அனுமதிப்பதா? விபத்துக்கள் ஏற்பட வழி செய்வதா? கையைக் காட்டத் தெரிந்தவர்தான் முச்சந்தியில் கடமையாற்ற வருவார். இவன் யார் கையைக் காட்ட என்றால்,'நேராகப்போய் மோதுங்களேன். அப்படி மோதினால் போலீஸ் காவலருக்கு நஷ்டம் இல்லை. (அவர் சௌகர்யமான இடத்தில் பத்திரமாக நிற்பார்) போக்குவரத்துக்குத்தான் நஷ்டம் விபத்து நடந்து விட்டால், வழக்கு பதிவு செய்ய இன்னொரு காவலர் வருவார் என்பதையும் மறக்க வேண்டாம்.

1956-ம் ஆண்டில் சுதேசமித்திரன் பத்திரிகையில் நடந்த தேக்கம்—வளப்பம் கருத்துப் போரில் விமர்சகர்கள் மீது (அப்போது விமர்சகர் என்ற பெயரில் சுட்டிக் காட்டப்படாதது குறிப்பிடத்தக்கது. ஒன்பது ஆண்டுகளுக்குள் விமர்சகனைத் தனியாக நினைத்துப் பார்க்கும் காலம் வந்திருக்கிறது.) வீசப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு மேல் புதிதாக இன்றும் ஏதும் சொல்லப்படவில்லை. இத்தனை ஆண்டுகளில் இலக்கியம் போலவே அவர்களுடைய கருத்தும் கூட வளர்ச்சி பெறவில்லை என்பதையே இது காட்டுகிறது.

சர்ச்சையின் மையத்தை விட்டு விலகி. நிரந்தரமாக மனதில் தேக்கி வைத்திருக்கும் தாக்குதல் எண்ணங்களை வெளியிட்டிருக்கும் ரஸவாதிக்கு, அவர் பாணியிலேயே ஈடுகொடுக்க முயன்றிருக்கிறார் க. நா. சு. காமாலைக் கண் பார்வையால் விளைந்த கருத்துக்களுக்கு மறுப்புக் கூறாமல், பூமாலை போட்டதாக எண்ணி, தன்னுடைய பணியின் தன்மையை விளக்க முற்பட்டிருக்கிறார். 'நான் இந்த விமரிசனத் துறையில் நல்லபடியாகவே பணி செய்கிறேன்' என்று கூறுவதற்கு அப்பால் இன்றைய விமர்சன வியாபகத்தைக் கோடிட்டுக் காட்டவில்லை. சந்தடி சாக்கில் ராமையாவின் பெயரை இழுத்ததுதான் மிச்சம். ராமையாவையும் சங்கரராமையும் பெயர் சொல்லிக் குறிப்பிட்டவர் திருட்டுக் கதைகள் எழுதி இவரால் குட்டுப்பட்ட ஆசிரியரின் பெயரையும் சொல்லி இருக்கலாமே.

இந்த சர்ச்சையைச் சாக்காக வைத்து சில விஷயங்களை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டம் வந்து விட்டது. விமர்சனம் சம்பந்தமாக பிரமை பிடித்திருப்பவர் ரஸவாதி மட்டும் அல்ல, இன்னும் பலபேர் உண்டு. எப்போதோ சில பிறமொழிப் பத்திரிகைகளில் க. நா. சு. எழுதிய சில குறிப்புக்களை விடாப்பிடியாக மனசில் நினைத்துக் கொண்டு அதையே விமர்சனம் என்று அவர்களை மகுடம் சூட்டி, அப்பால் பதறுவதும் பாய்வதும் இனிமேலும் நீடிக்கத் தேவையில்லாத 'கண்ணாமூச்சி' விளையாட்டு. க. நா. சு. வுக்கும் சொல்லவேண்டும் அந்த விளையாட்டில் கலந்து கொள்ளும் கைங்கர்யத்தை நிறுத்தி விட்டு விமர்சனக் குறிப்புகள் எழுதுவதை விட்டு விமர்சனக் கட்டுரைகள் எழுத அவர் முன் வரவேண்டும். இல்லாவிட்டால் அவருடைய அரைகுறைப் பணியே விமர்சனத்துக்குக் கெட்ட பெயர் சம்பாதித்து,அந்தத்துறையையே தீண்டத் தகாததாக ஆக்கி, உருப்படாமல் செய்துவிடும்.

இறுதியாக, ரஸவாதிகளின் பார்வைக்குச் சிலவரிகளைச் சமர்ப்பிக்கிறேன் இந்த வரிகளின் சொந்தக்காரர் ஒரு விமர்சகர் அல்ல. அல்லது அந்த ஜாதியைச் சேர்ந்த யாரும் அல்ல.

அப்படி ஒரு ஜாதியையே சிருஷ்டித்து விட்டார்களே இந்த எழுத்தாளர்கள்! மாறாக, அவர்களின் பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் பாத்திரமான ஒரு பத்திரிகை ஆசிரியர். எழுத்தாளர்களின் 'சரியான, நியாயமான வளர்ச்சிக்கு உதவக்கூடிய அருளாளர். அவர் கூறுகிறார்:

'சிறுகதைத் துறை தமிழில் தோன்றியபோது இவ்வளவு பத்திரிகைகள் இல்லை. அவரவர்கள் தங்கள் சொந்த ஊக்கம் காரணமாகவே சிறுகதைகள் எழுதினார்கள். அவை இயல்பான ஜீவனுடன் இருந்தன. ஆனால் நாவல்களைப் பத்திரிகைக்காக எழுதுகிறார்கள். பலசமயங்களில் இன்னபடி இருந்தால் நல்லதென்று பத்திரிகைக்காரர்கள் விரும்பும் வகையில் எழுதுகிறார்கள். இதனால் எழுத்தாளர்கள் தம் மனம் போன போக்கின்படி இயல்பான உணர்ச்சி உந்த எழுதுகிற வாய்ப்புக் கிடைப்பதில்லை இப்போது வெளி வந்துள்ள நாவல்களில் எல்லாமே தொடர்கதைகளாக வந்தவை என்பதைப் பார்த்தால் இக்கருத்து விளங்கும்.

'சிறுகதைத் துறையில் ஒரு தேக்கம் ஏற்பட்டிருந்தாலும்' என்று தொடங்கி மேற்சொன்ன வரிகளைப் படைத்த அந்தப் பத்திரிகை ஆசிரியர் மேலும் அருளிய வாக்கு இது 'விற்பனையாகிற புத்தகங்களைப் படைக்கும் ஆசிரியர்கள் வேறு' நல்ல இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்கள் வேறு என்ற நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது.'

இந்தக் கருத்துக்களை வழங்கியவர் கி. வா. ஜகந்நாதன். ஆகஸ்ட் மாத 'தீபம்' இதழில் வெளியான பேட்டியிலிருந்து எடுத்த ,வரிகளே இவை.

சம்பந்தப்பட்டவர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்—மோதிரக் கையால் குட்டுப் பட்டதற்காக.

நாடகத்திற்கு ஒரு தனிக்கொடி

மணிக்கொடியைத் துவக்கியபோது அதற்கு எத்தனையோ நோக்கங்கள் இருந்திருக்கும். ஆனால் அதனால் சாதிக்க முடிந்தது தமிழ்ச் சிறுகதைத் துறைக்குச் சாரமான உரமிடமுடிந்தது ஒன்றுதான். பத்திரிகை உலகில் கவிதைத் துறையைப் பொருத்தவரை செல்லப் பிள்ளை இடம்தான் இதுவரை உண்டே தவிர சொந்தப் பிள்ளை என்ற தகுதியுடன் கவிதைக்குக் கூறிக்கொள்ள ஒரு பத்திரிகையை சாதனையுடன் உருவாக்க மீண்டும் அந்த பாரதியேதான் பிறக்கவேண்டும். அது கிடக்கட்டும். நான் இங்கு கூறவந்தது வேறு. சங்கம் வைத்து வளர்த்ததாக ஜம்பம் அடிக்கும் முத்தமிழில் ஒரு தமிழான நாடகத் தமிழில் பத்திரிகை உலகம் சாதித்ததென்ன என்பதே இங்கு பரிசீலனைக்குரியதாகும். ''எங்க வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்'' என்பதுபோல, எங்கள் தமிழிலும் நாடகங்கள் இருக்கின்றன என்று வேண்டுமானால் கூறிக்கொள்ளலாமே தவிர, ''எங்கே இருக்கிறது தமிழ் நாடகம்'' என்று கேள்விக் கணை கிளப்புவோரைக் கண்டு நெற்றிக் கண்ணைக் காட்டிப் பயனில்லை. உள்ள நிலைமையை ஒழுங்காகவும், சரியாகவும் பரிசீலிப்பதில் கவுரவக் குறைவு ஏதுமில்லை. ''எனக்கென்னையா குறைச்சல், ராஜா மாதிரி இருக்கேன்'' என்று வரட்டு ஜம்பம் பேசிக் கொண்டு வீட்டிற்கு விளக்கேற்றக்கூட வக்கற்றவனாய் இருப்பவனுக்கு சாகும்வரை பரிகாரம் ஏதுமில்லை. ஆகையால் மனம் திறந்து பரிசீலனை செய்வதன் மூலமாகவும், முடிந்தால், அவசியப்பட்டால் அதிர்ச்சி வைத்தியத்தின் மூலமாகவும்தான் நாடகத் துறையின் தேக்க நிலையை களையமுடியும். சாதனைகளைக் காணமுடியும்.

நாடகத் துறையைப் பரிசீலிக்க உதவியாக ஒரு அளவுகோல் கிடைக்குமானால் நமக்கு வேலை சுலபமாகும். மணிக்கொடி எழுத்தாளர்களால் தமிழில் சிறுகதைத் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியல்ல—மலர்ச்சியை ஒரு அளவுகோலாகக் கொள்ள நான் விரும்புகிறேன். அரசியல், சமுதாயம், இலக்கியம் அதுஇது என்று எத்தனையோ நன்னோக்கங்களுக்கு பிரதிநிதித்துவம் வகித்துத் தோன்றிய மணிக்கொடி, தமிழில் ஐரோப்பிய மொழிகளுக்கிணையான சிறுகதைகளைப் படைத்த ஒரு சாதனையைத்தான் சாதிக்க முடிந்தது. சாதனை ஒன்றே ஆனாலும், இலக்கியத் துறையில் அசுர சாதனையாகும் அது; இதே மாதிரி நாடகத் துறைக்கும் ஒரு 'தனிக்கொடி' அமையாமல் போனது நாடகத் துறையைப் பிடித்த துரதிர்ஷ்டமே. இதற்குக் காரணம் இப்பணிக்குத் தகுதியானவர்கள், அதாவது ''இதனை இதனால் இவன் செய்யும்'' என ஆய்ந்து தேர்ந்து செய்யவேண்டியதைச் செய்யும் தகுதியானவர்கள் தமிழ் நாடகத் துறைக்கு இதுவரை கிட்டவில்லை—இதற்கு தேரோட்டி மகனைப் படைத்த பி. எஸ். ராமையாவும்கூட விலக்கில்லை. ஏனென்றால் ராமையாவுக்கு இதனைச் செய்ய வேண்டுமென்றுதான் இதுவரை தோன்றியுள்ளதே தவிர 'இதனால் செய்ய வேண்டுமென்ற அவசியம் தோன்றவில்லை. தோன்றியிருந்தாலும் செய்யவில்லை.

அறுபதை எட்டிய நிலையில் எல்லோரும் பி. எஸ். ராமையாவின் சாதனையை உச்சிமேல் வைத்து மெச்சிக் கொண்டிருக்கும்போது, ராமையாவே ''நான் வீணான வாழ்வு வாழ்ந்துவிடவில்லை என்று மனநிறைவு கொள்கிறேன்'' என்று திருப்திகொண்டுள்ள வேளையில், நான் இப்படிக் கூறத் துணிந்தது ஒரு அபசுவரம்தான். ஆனால் இதைக் கூறியாக வேண்டியதற்கான அவசியம் இதையும்விட முக்கியமானது. உண்மை வேறெதையும்விட முதல் இடம் பெறத்தக்கதல்லவா?

தூங்கி விழித்தவனுக்கு ஞானோதயம் பிறந்ததுபோல ஏதாவது ஒரு பத்திரிகை ஆயிரம் ரூபாய் பரிசில் நாடகப் போட்டி அறிவித்து நாடகத் துறைக்குச் சேவை செய்யக் கிளம்புவதும், பிறகு ஐந்தாறு ஆண்டுகளுக்கு நாடகத் துறை நினைவையே மறந்துவிடுவதும்தான் தமிழ்கூறும் நல்லுலகம் கண்ட பலன். விற்பனைப் பிரச்னை காரணமாக சினிமாப் பகுதியை சேர்த்தாக வேண்டிய நிலைக்கு கிட்டத்தட்ட எல்லா தமிழ்ப் பத்திரிகைகளுமே பலியான பிறகு இடையிடையே ஏதாவது ஒரு நாடகத்துக்கு விமர்சனத்தையும் அப்பகுதியில் செய்து வைப்பதன் மூலம் தாங்களும் நாடகத் துறையை மறந்துவிடவில்லை என்று காட்டிக் கொள்ள நினைக்கிறார்கள் இன்னும் சில பத்திரிகை ஆசிரியர்கள். படைப்புக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த பிறகல்லவா விமர்சனத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். ஒரு பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் முதலில் செய்தாக வேண்டிய பொறுப்பை நிறைவேற்ற வக்கில்லாதவர்கள் தானும் எதையாவது செய்து கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்ளத் துணிவதை நகைப்புக்கிடமான செயலாகவே எதிர்காலத்தோர் கணிப்பார்கள். விதை போடாமல் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும் இத்தகைய விவேகத்தை அவர்களே வேண்டுமானால் தம்மைத் தாமே மெச்சிக்கொள்ள முடியும். ஹாஸ்ய நாடகங்கள் என்ற பெயரில் கோமதி சுவாமிநாதன் எழுதி வந்ததைப்போன்ற மூன்றாம்தர படைப்புக்

களைப் போன்ற நாடகங்களைக்கூட இன்றைய தமிழ்ப் பத்திரிகைகளில் காணமுடிவதில்லையே! ஆனால் இதே நேரத்தில் அண்டை மொழியான மலையாளத்தில் நாடகத் துறைக்கு பத்திரிகை களில் கிடைத்துள்ள நிலை என்ன தெரியுமா?

மலையாளத்தில் கட்சி வேறுபாட்டுக்கும், கருத்து வேறுபாட்டுக்கும் பஞ்சமிருக்காது என் பதை எல்லோரும் அறிவார்கள். அது போலவே அத்தனை வகையான அபிப்பிராயங்களுக்கும் ஆளுக்கொரு பத்திரிகையையும் சொந்தமாக வைத்திருக்கிறார்கள் அங்கு. இத்தனை வேறுபாடு கள் இருந்த போதிலும் எல்லா மலையாள மொழிப் பத்திரிகைகளிலும் ஒரு விஷயத்தில் ஒருமித்த போக்கைப் பார்க்க முடியும். சிறுகதைகளுக்கும், நாவலுக்கும் உரிய அளவு சமமான இடத்தை நாடகத் துறைக்கும் இப்பத்திரிகைகள் அனைத் தும் ஒன்று சொன்னதுபோல ஒதுக்குவதுதான் அந்த ஒருமித்த அம்சம். ஓரங்க நாடகமாவது இல்லாத மலையாளப் பத்திரிகை ஒன்றைக்கூட எவரும் பார்க்க முடியாது. இந்த நிலமை தமிழில் மட்டும் ஏன் சாத்தியமாகவில்லை. இதை எண்ணிப் பார்த்து பரிகாரம் காண நாம் கடமைப் பட்டிருக் கிறோம்.

ஒரு மணிக்கொடி மட்டும் விதைத்த நெல் மணிகளில் சிதறி முளைத்தவர்கள்தான் இன்றைய சிறுகதைப் படைப்பாளிகளில் பெரும்பாலோர். இவர்கள் இன்று பல்வேறு பத்திரிகைகளிலும் ஒதுங்கி பொறுப்பு வகிக்கிறார்கள். இதன் பலன் தான் இன்று எல்லாப் பத்திரிகைகளிலுமே சிறு கதைகள் முதல் இடத்தை ஆக்கிரமித்துக் கொண் டுள்ளன. இதுபோலவே நாடகத்துறைக்கும் ஒரு விதைக் களஞ்சியம் அமையாமல் போனதுதான் எந்த தமிழ்ப் பத்திரிகையும் நாடகத் துறையில் முறையாகப் பணியாற்ற முடியாமல் இருப்ப தற்கு அடிப்படைக் காரணமாகும். இக்குறை தெரிந்தும் பூனைக்கு மணிகட்ட யாரோ வருவார் கள் என்று சும்மா இருத்தல் தகுமா? மற்றவர்கள் வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகட்டும். நாடகத் துறையில் ஓரளவு—ஓரளவு என்றால் ஓரளவுதான்—சாதனை புரிந்த அனுபவத்தைக் கொண்டுள்ள ராமையா போன்றவர்களுக்கும் கூட இப்படி ஒதுங்கிச் செல்ல முடிகிறதா? தன் சக்திக்குப் புதிதாக இருந்தும்கூட, எடுத்துக் செய்ய வேறு ஆள் இல்லை என்ற நிலையில் ஏற்றுச் செய்ய தயார் என்று சாதித்துக் காட்டிய ராமையா தன்னால் முடிந்த, மற்றவர்களைவிட தனக்கு மட்டுமே சிறிது அனுபவமுள்ள ஒன்றைச் செய்ய வேண்டிய முறையில் செய்யாமல் விட் டால் காலமும் தமிழும் அவரைச் சபிக்காதா? இதன் ஆரம்பக் குரல்தான் இந்த எனது எதி ரொலி. சிறுகதைக்கு ஒரு மணிக்கொடி போல நாடகத்துக்கும் ஒரு தனிக்கொடி வேண்டும்!' பாலைவனத்தில் இருந்து கொண்டு பந்திபோஜனம் நடத்தத் துணிந்தவர்களுக்கு சோலைவனத்தில் இருந்து கொண்டு தாகத்துக்கு தண்ணீர் அளிப் பதா பெரிய காரியம்? இத்தனைக்கும் பிறகு என் னால் முடியாது என்று இன்றைய தலைமுறை தன் பொறுப்பை நிறைவேற்றுவிட்டால் அடுத்த தலைமுறை நிச்சயமாக தன் பொறுப்பை நிறை வேற்றும் என்பதையும் நம்பிக்கையோடு குறிப் பிட விரும்புகிறேன்.

மதுரை — சித்திரபாரதி

சுவையான தகவல்கள்

எழுத்தாளருக்கு எழுத்தாளர்!

பிரபல வங்க நாவலாசிரியர் சரத்சந்திரரைச் சந்தித்த நண்பர் ஒருவர். ''எங்களுக்கெல்லாம் உங்களுடைய கதைகள் எளிதாகப் புரிகிறது. தாகூரின் எழுத்துக்களை அவ்வளவாகப் புரிந்து கொள்ள முடியவில்லையே'' என்று அங்கலாய்த் தாராம். சரத்சந்திரர் பட்டென்று பதிலளித்திருக் கிறார். ''நான் உங்களைப்போன்ற வாசகர்களுக்காக எழுதுகிறேன், தாகூரோ என்னைப் போன்ற எழுத்தாளர்களுக்காக எழுதுகிறார்''.

இந்தப் பிரபல துணுக்கின் சாரத்தைப் பல வருஷங்களுக்கு முன்பே படித்து ரசித்தது போக, இப்போது தமிழ் எழுத்துலகில் நிதர்சனமாக உணரும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பி. எஸ். ராமையா பாராட்டுக் கூட்டம் ஒன்று சமீபத்தில் மதுரை எழுத்தாளர்களால் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு பேசிய சி. சு. செல்லப்பா, ''தமிழ்ச்சிறு கதை உலகில் உள்ளடக்கத்தைப் பொறுத்த மட்டில் பல்வேறு ரகங்களைப் படைத் திருப்பவர்கள் பிச்சமூர்த்தியும் ராமையாவும்'' என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து மதுரை எழுத்தாளர் ஒருவர், ''எங்களுக்கெல்லாம் ராமை யாவின் கதைகள் புரிகின்றன, பிச்சமூர்த்தியின் கதைகள் அப்படிப் புரியவில்லையே என்று பேசினர். இறுதி உரையில் ராமையா, தாகூர்—சரத்சந் திரர் துணுக்கை நினைவு படுத்தி 'அதுமாதிரி வைத்துக் கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டார்.

தமிழில் எழுதவைத்த தெலுங்கர்!

சமீபத்தில் பெ. நா. அப்புசாமி, பி. எஸ். ராமையா, க.நா. சுப்ரமண்யம், சி. சு. செல்லப்பா ஆகியோர் தமிழ் சிறுகதை பற்றி பேசிக் கொண் டிருந்தார்கள். அப்போது ஒரு தெலுங்கர்தான் தான் தமிழில் கதை எழுதுவதற்கு காரணம், தூண்டுதலாக இருந்தவர் என்றார் க. நா. சு. மற்ற மூவரும் வியப்புடன் அவரைப் பார்த்தார்கள். 1931-35ல் 'காந்தி' என்ற பத்திரிகையில் வத்தலக்குண்டு எஸ். ராமையா என்ற பெயரில் தமிழில் ஒருவர் கதை எழுதினதை படித்துவிட்டு, ஒரு தெலுங்கரே தமிழில் கதை எழுதுகிறபோது, அதுவரை இங்கிலிஷில் எழுதி வந்த தான் ஏன் தமிழில் கதை எழுத முடியாது என்று தன்னை கேட்டுக்கொண்டாராம். வத்தலக்குண்டு என்பது தெலுங்கு தேசத்து ஊர் என்றும் அதனால் ராமையா தெலுங்கர் என்றும் முடிவு கட்டி இருந் தார் க. நா. சு.!

சங்கம் மரபில் ஒரு அகப்பாட்டு

சி. கனகசபாபதி

சங்க அகப்பாட்டுக்கள் குறுகிய தனிநிலைப் பாட்டு உருவமானவை. அளவு நீண்ட அகப்பாட்டுக்களாக இருப்பவை. சங்க காலத்திய பத்துப் பாட்டின் தொகுப்பில் உள்ள முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு மட்டுமே.

சங்ககால அகப்பாட்டுக்கள் தன்னுணர்ச்சிகளை வெளிப்படுத்துகிற போக்கானவை. காதல் கொண்ட இருவர், அவர்களின் காதலால் பாதிப்பு அடைந்த மற்ற மக்கள் ஆகியோருடைய தன்னுணர்ச்சிகளை அவரவர் பாத்திரப் பேச்சுக்களாக எழுதுகிற 'லிரிக்கின் தோரணையே' சங்க 'அகப்பாட்டுக்களில் இருக்கிறது.

அந்தத் தோரணை எப்படி என்று கேட்டால் தன்னுணர்ச்சியை ஒரு சின்னச் சம்பவ நிலையில் அல்லது ஒரு மனநிலையில் ரொம்ப குறுகிய பாட்டு உருவத்தில் வெளியிடு செய்கிறதைச் சொல்லலாம். மனித உரையாடலின் நேர் எளிய போக்கில் ஒவ்வொரு சங்க அகப்பாட்டும் அமைய உருவாக்கப்பட்டிருப்பதைச் சொல்லலாம்.

லிரிக்கு என்பதுக்குத் தக்கபடி ரொம்ப மெல்லிய உணர்ச்சிப் பரப்பில் அகப்பாட்டு எழவேண்டும் என்று பாடப்பட்டிருக்கிறது சங்கம் மரபுக்குத் தக்கபடி அகப்பாட்டில் ஒரு 'மௌன நிழலாட்டம்' காட்டுகிற கொஞ்சம் நாடகத் தோரணையும் உண்டு.

கீழே ஒரு ஆறுவரிப் பாட்டைத் தருகிறேன். இது சங்கம் மரபில் உருவானதுதான். இதில் சங்கம் மரபான குறுகிய தனிநிலை அகப்பாட்டுக்கு உரிய கலைத்தன்மையை ஆய்வதுதான் இங்கு என் நோக்கம்.

1 "நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
2 சாரச் சார்ந்து
3 தீரத் தீரும்
4 சாரல் நாடன் கேண்மை
5 சாரச் சாரச் சார்ந்து
6 தீரத் தீரத் தீர்பொல்லாதே."

இதைப் படித்தவுடனே ஏதேது ஒரு அபூர்வப் பிறவியாகத் தோன்றுகிறதே என்று யாருக்கும் சொல்லவரும். வரிகளுக்கு எண்கள் கொடுத்தது ஆய்வு முறைக்குச் சவுகரியமாக இருக்க.

இதே பாட்டைக் கல்லூரியின் பெரிய வகுப்பு மாணவர்கள் பார்த்துச் சொல்லட்டும் என்று ஒரு நடைமுறைத் திறனாய்வு நடத்திப் பார்த்த பிறகே இந்தக் கட்டுரை எழுதுகிறேன். இதைப் படித்தவர்களுக்கு எல்லாம் முதலில் ஏற்பட்டது, பாட்டு விளங்கவில்லை என்று. சொல்புரிகிறது, பொருள் தான் என்னமோ என்று ஏகோபித்த குரல் கொடுத்தார்கள். மனசில் பட்ட பொருளைச் சொல்லும்படி கேட்டதுக்கு ஒருசில அர்த்தங்களைக் கூறலாம் என்றார்கள்.

"தண்ணீரின் குளிர்ச்சியும் தீயின் சூடும் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருந்து பிறகு பிரிந்துவிடும். தலைவனுடைய காதல் அதுபோலச் சேர்ந்திருந்து பிறகு பிரியவே பிரியாது."

"தண்ணீரும் தீயும் பிரிக்க முடியாத இயற்கைப் பொருள்கள். அவனுடைய காதலும் பிரிக்க முடியாதது.'

"தண்ணீருக்குக் குளிர்ச்சியும் தீக்கு வெப்பமும் உண்டு. காதலியிடம் பொருந்தியிருப்பது குளிர்ச்சி. தலைவனிடம் பொருந்தியிருப்பது வெப்பம்."

"காதல் வாழ்விலும் தண்ணீரின் குளிர்ச்சி உண்டு; தீயின் வெப்பமும் உண்டு."

இப்படியெல்லாம் பொருள் விரிக்கும் படலம் விரிந்தது. யாருக்கும் இந்தப் பாட்டின் பொருளடக்கத்தையோ வடிவத்தையோ அணுகிப் பார்த்துச் சொல்ல வரவில்லை. எந்தப் பாட்டானாலும் அது எழுந்த கால மரபு தெரியாவிட்டால் விளங்காமல் போய்விடுமோ என்ற சந்தேகம் எனக்குள் எழுந்தது. சங்கம் மரபு ஆனானப்பட்ட எவ்வளவு பழசு. அது தெரியாத காரணம் தான் இந்தப் பாட்டு ஒரு புதிராகத் தோன்றுகிறதாக்கும் என்று எண்ணிக்கொண்டேன்.

இது புதிரா பாட்டா? இது புதிரே அல்ல. நிச்சயம் பாட்டே தான்.

சங்கம் மரபான ஒரு அகப்பாட்டில் பெரும்பாலும் முதல் தொடக்க வரிகள் சிலதில் ஏதாவது இயற்கை நிகழ்ச்சி சித்திரிக்கப்படும். அதில் இவ்விதம் உருவாகும் படிமப்படைப்பு அப்பாட்டின் அசைவுடன் செயல் ரூபமாகப் பயன்படும். ஒரு 'தொடர் உருவகமாக' அந்த இயற்கை நிகழ்ச்சி அழகாக நிற்பதைப் பார்க்கலாம். பாட்டின் தன்னுணர்ச்சியோடு அதிலுள்ள ஆரம்ப இயற்கை நிகழ்ச்சி கலந்து பொருந்துவதைப் பார்க்கலாம்.

இன்னும் சரியாகச் சொன்னால், குறிப்பிட்ட ஒரு நிலத்தின் இயற்கை நிகழ்ச்சியே அந்தப் பாட்டின் தன்னுணர்ச்சியோடு கலந்து பொருந்தியிருக்கும்.

ஆகவே எந்த ஒரு சங்கம் மரபான அகப் பாட்டைப் பார்க்கிறபோதும், அதில் ஒரு நில இயற்கை நிகழ்ச்சியும் காதல் தன்னுணர்ச்சியும் எப்படி வருகின்றன, எப்படிக் கலக்கின்றன என்பதையே நாம் பார்க்கவேண்டியது அவசியம் ஆகிறது. அந்தக் காட்சியைப் பார்க்கிறதைவிட அப்படி ஆக்கிய கலையைப் பார்க்கிறது ரொம்ப அவசியம்.

இந்த அணுகும் முறை கொண்டு மேலே கொடுத்த பாட்டைப் பார்க்கலாம். அதின் முதல் தொடக்க வரிகள் சிலதில் என்ன இயற்கை நிகழ்ச்சி சித்திரிக்கப்படுகிறது? முதல் நான்கு வரிகளில் ஒரு மலைச்சாரல் இயற்கை நிகழ்ச்சி அல்லவா பார்க்கிறோம்.

1 "நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
2 சாரச் சார்ந்து
3 தீரத் தீரும்
4 சாரல்............

தண்ணீரின் குளிர்ச்சி அந்த மலைச்சாரலில் சாரச் சாரும்போது, தீயின் வெப்பம் தீரத் தீர்கிறது. இவ்வளவுதான் இந்த நாலுவரிகளுக்கும் பொருள் என்றால் புரிந்துவிடவில்லை. சாரலில் மழை பெய்யத் தொடங்குவதால் தண்ணீரின் குளிர்ச்சி பையப்பைய அங்குப் பரவுகிறது. இதனால் வெயில் கொண்டு எரித்த சூரியன் சூடு தணிகிறதால் வெப்பம் கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சாரலிலிருந்து நீங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப் பல வரிகளிலும் சொல்லவேண்டிய ஒரு தொடர்ச்சியான இயற்கை நிகழ்ச்சியை ரொம்பவும் செட்டான சொற்களில் கொண்டுவந்திருக்கிறார் இது பாடிய கவிஞர்.

அந்தச் சாரலை உடைய நாட்டுக்கு உரியவனாக ஒருவன் இருந்தான். அவனுடைய காதல் எப்படிப்பட்டது என்பதைச் சொல்லுவதே இந்தப்பாட்டு முடிகிற பகுதி.

4 "சாரல் நாடன் கேண்மை
5 சாரச் சாரச் சார்ந்து
6 தீரத் தீரத் தீர்பொல்லாதே."

அவனுடைய காதலில் தண்ணீரின் குளிர்ச்சி வந்து சேர்கிறது. ஆனால் அப்படிக் குளிர்ச்சி சேரும்போது தீயின் வெப்பம் அதைவிட்டு நீங்கிப் போவதில்லை.

இது எனக்குத் தோன்றுகிறபாட்டுப்பொருள் தான். அவன் காதலியின் உடன் இருக்கும்போது மனம் குளிர்ந்திருக்கிறது இவளுக்கு. அவன் இவளைப் பிரிந்திருக்கும்போது மனம் வெதும்பிப் போகிறது இவளுக்கு. இது இவள்நிலை என்றால், அவனுடைய காதலின் தன்மை என்றால், அந்தச் சாரல் தோன்றுவது எப்படி? குளிர்ச்சி சாரச் சாரும்போது தீயின் வெப்பம் தீரத் தீர்கிறது அந்தச் சாரலில் அங்கே. அதாவது வெப்பம் தணிவது சாரலுக்கு உண்டு; ஆனால் இவளுக்கு இல்லை

இந்தப் பாட்டு ஒரு பாத்திரப் பேச்சு. ஒரு மனநிலையை வெளியிடுகிற குறுகிய தனிநிலைப் பாட்டு. மலைச்சாரலில் ஒருவனைக் காதலித்த ஒரு பெண்ணின் பாத்திரப் பேச்சு இதில் இருக்கிறது. மலைப்பாங்கான நிலத்திலும் திருமணத்துக்கு முந்திய காதல் நிலையில் பிரிவு தோன்றலாம். அந்தப் பிரிவு - மனநிலையை ரொம்ப மெல்லிய உணர்ச்சிப் பரப்பில் வெளியிடுகிற லிரிக்கின் தோரணையைத் தான் இதில் பார்க்கிறோம் மனித உரையாடலை நேர் எளிய போக்கில் உருவமாக்கும் இதிலுள்ள கலைப்போக்கு நம் வாசிப்பில் தெரிகிறது. உண்மையில் இந்தப் பாட்டு வாசிப்புக்கே லாயக்கு; இசையமைப்பில் பாடப்படவில்லை.

சங்கம் மரபுக்குத் தக்கபடி மலைச்சாரலைப் பற்றிய இயற்கை நிகழ்ச்சி முதலில் வர, அதோடு காதல் தன்னுணர்ச்சி கலந்து பொருந்திவருகிறது. இவை வந்து அமைந்து கலக்கின்ற கலைத்தன்மையைப் பார்ப்போம்.

மலைச்சாரலில் மழைபெய்து தண்ணீரின் குளுமை வரவர, அங்குள்ள சூரிய வெப்பம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து கொண்டிருக்கிறது. மழைநீரின் குளுமையும் சூரிய வெப்பத்தின் குறைவும் சாரலில் ஒரு மௌன நிழலாட்டம் மலைச்சாரல் பெண் இப்படி நடக்கிற மௌன நிழலாட்டத்தில் தான் ஒன்றிப்போய் அதுபோலத் தனக்கு நடக்கவில்லையே என்று வருந்துகிறாள். நிழல் வாழ்க்கையாக நிஜவாழ்க்கை ஆகிவிடவேண்டுமே என்று விரும்புகிறாள். அவளுடைய இந்தத் தன்னுணர்ச்சியோடு சாரலில் நடக்கிற இயற்கை நிகழ்ச்சி ஒரு 'உயிரி'யாகக் கலந்து பொருந்துவதையே உயர்ந்த கலைத்தன்மையாக இங்கு நாம் பார்க்கிறோம். சங்கம் மரபுக்குத் தக்கபடி அகப் பாட்டில் ஒரு 'மௌன நிழலாட்டம்' ஒரு 'உயிரி'யாகத் தோன்றும்படி காட்டுகிற கொஞ்சம் நாடகத் தோரணை இது என்று என் ஆய்வுக்குப் புலப்படுகிறது. இன்று நாடகம் என்றால் நாம் எந்த முழுப் பொருளை அதுக்குக் கொடுக்கிறோமோ இந்த முழுப் பொருளில் சங்கம் மரபான அகப் பாட்டின் நாடகத் தோரணையைப் பார்க்கமுடியாது. ஆங்கில லிரிக்குகள் என்றால் நாடகப் போக்கே இல்லாத ரொம்ப மெல்லிய உணர்ச்சிப் பரப்பில் எழவேண்டும் என்று பாடப்பட்டிருக்கின்றன. இயற்கையின் மௌன நிழலாட்டம் காட்டுகிற கொஞ்சம் நாடகத் தோரணை சங்கம் மரபான தமிழ் அகப்பாட்டுக்களுக்கு ஒரு தனித் தன்மை. கிரேக்க லிரிக்குகள் என்றால் இசைத்துப் பாடவே உரியன. சங்க காலத் தமிழ் அகப்பாட்டுக்களை இசைத்துப் பாடவேண்டாம்; வாசிப்புக்கே உரியன. அதிகமாக அகவலில் அமைந்த அகப்பாட்டுக்களையே இங்கு நான் எண்ணிப் பார்த்து ஆங்கில, கிரேக்க லிரிக்குகளின் தோரணைகளிலிருந்து வேறுபாடு அம்சத்தைச் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். இந்த ஆய்வு மேலும் விரிவான பரிசீலனைக்கு உரியது.

நாம் பார்த்துவருகிற அகப்பாட்டு ஒரு 'மாய விளைவு' தருகிறது. இது எதனால் என்றால் உருவத்தால்தான். மரபான அகவல் யாப்புருவத்திலிருந்து இது சிதைந்து மாறுபட்டு ஒலிக்கிறது. முதல் வரியில் நான்கு சீர்கள். இரண்டாவது மூன்றாவது வரிகளில் இருசீர்கள். நான்கிலும் ஐந்திலும் மூன்று சீர்கள். ஆறாவது கடைசி வரியில் முதல் வரியைப் போலவே நான்கு சீர்கள். இந்தவிதம் வந்திருப்பது யாப்புச் சட்டத்திலிருந்து விதிமாறியது. ஏனென்றால் இந்த மாதிரி அகவல் பாவில் ஈரசைச் சீர் கொண்ட வரி அமைப்பு வரலாம் என்று பழைய இலக்கணம் கூறவில்லை. இது இலக்கணம் மீறின கவிதை என்று நாம் பார்க்கிறோம்.

இப்படி இலக்கணம் மீறுவதால், மரபான அகவல் யாப்புருவத்திலிருந்து சிதைவு கொண்டிருப்பதால், இது கவிதையின் சிறப்பை அடைய முடிகிறது என்று நான் கருதுகிறேன்.

எப்போதுமே பலரும் நடந்து நடந்து பழகிப் போன ஒரு தடத்திலிருந்து ஒலிநயத்தின் புதுமைக்காகவும் சிறப்புக்காகவும் மாறுபடுகிறபோது தான் ஒரு பாட்டு தன்னளவில் கவிதையாக உயர முடிகிறது. இது கவிதையின் உருவ, ஒலி நயத்தைக் குறித்த ஒரு உண்மை. பழசாகிய ஒன்றில் மட்டும் ஊறிப்போனவர்களுக்கு இது உண்மையாகப் படாவிட்டால் நாம் என்ன செய்யலாம்? கவிதை உலகை விட்டுக் கதை உலகைப் பார்த்தால், சிற்பிகளைப் பற்றிய நாம் கேட்ட நாடோடிக் கதைகளைப் போலவே, புதுமைப் பித்தன் தமது 'சிற்பியின் நரகத்தை' உருவாக்கவில்லை அல்லவா?

ஒரு தன்னுணர்ச்சியான அகப்பாட்டு ஆழம் அவ்வளவாக இல்லாத இலேசான பாட்டாக இருக்கலாம். அல்லது உட்சிக்கல் பொருந்தியதாகவும் வரலாம். நாம் பார்த்துவரும் இந்த அகப்பாட்டு ரொம்ப அழகான உட்சிக்கல் பொருந்தியது. இதிலுள்ள ஒலிநயமும் இதின் உட்சிக்கலை எடுத்துக்காட்டுகிறது.

> ''நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
> சாரச் சார்ந்து
> தீரத் தீரும்......''

இந்த முதல் மூன்று வரிகளில் 'ர' ஓசை அதிகப் பட்டு வந்திருக்கிறது.

> ''சாரல் நாடன் கேண்மை
> சாரச் சாரச் சார்ந்து
> தீரத் தீரத் தீர்பொல்லாதே.'':

கடைசி மூன்று வரிகளிலும் 'ர' ஓசை மேலும் அதிகப்பட்டு ஒலிக்கிறது. இதுக்குரிய காரணம் என்ன என்று பாட்டின் கருத்தோடு சேர்த்து எண்ணிப் பார்த்தால் புலப்படும்.

மலைச்சாரல் பெண் அந்தச் சாரலில் பிரிவு—மனநிலையில் சொல்லும் முறையில்தானே இந்தப் பாட்டு இருக்கிறது. அவளுடைய பிரிவு—மன நிலை கண்மூடும் மயக்க நிலையாக இருப்பதாகக் கவிஞர் காண்கிறார். இதில் அதிகப்பட்டு வரும் 'ர' ஓசை 'ஆராரோ ஆராரோ' என்னும்போது உண்டாகிறதைப்போல ஒரு மயக்க நிலையை ஒலிக்கச் செய்கிறது.

கடைசி வரியான 'தீரத் தீரத் தீர்பொல்லாதே' என்பதில் 'ல' ஓசை வந்து முடிவது காதில் கேட்டு மனசில் உணரத்தக்கது. இதில் 'ல' ஓசையும் 'தாலே தாலேலோ' என்பதில் போலக் கேட்டவுடன் ஒரு மயக்க நிலையை ஒலிக்கச் செய்கிறது. பிரிவின் தன்னுணர்ச்சியை வெளியிட இப்படி மயக்க நிலையைத் தரும் மாய விளைவு செய்கிற ஒலிநயம் பொருத்தமாக இருக்கிறதை இதை வாசிப்பவர்கள் உணரமுடியும்.

இதிலுள்ள சொல்—பின்—சொல் தொடர்ச்சி ஒரு சீரமைப்பில் வராமல் ஏன் மாறிவரவேண்டும் என்று கேட்கலாம். 'சாரச் சார்ந்து', 'தீரத்தீரும்' என்று முதலில் இரு சீர்களில் வந்து, 'சாரச் சாரச் சார்ந்து', 'தீரத் தீரத் தீர்பு' என்று மூன்று சீர்களாகப் பெருகியிருப்பது மனநிலையின் வேகத்தைப் புலனாக்குகிறது என்று கருதலாம்.

இவ்வளவு கலைத்தன்மையான அகப்பாட்டு இது என்று இதைப் பலமுறை வாசிப்பவர்கள் உணரமுடியும் என்று கருதுகிறேன். கடைசியாக இது பாடிய கவிஞர் யார் என்று கேட்டால் நான் குறிப்பிட்டுவிடுகிறேன். இதைப் பாடியவர் யார் என்று தெரியவில்லை. சங்கத் தொகுப்புக்களில் சேராத, ஆனால் சங்கம் மரபான ஒரு அபூர்வப் பிறவி இந்த அகப்பாட்டு.

என்ன பசியோ?

த. நா. சுவாமிநாதன்

'பள்ளி'
மணி அடித்தது !
ஓடினர் சிலர்
அறிவுப் பசி தணிக்க!

'கேண்டீன்'
மணி அடித்தது!
ஓடினர் சிலர்
உண்டிப் பசி தணிக்க !

'ஆலய'
மணி அடித்தது !
ஓடினர் சிலர்
ஞானப் பசி தணிக்க !

'கொட்டகை'
மணி அடித்தது
ஓடியது கும்பல் !

விமர்சனமும் இலக்கியமே

மு. பழனிசாமி

இலக்கியம் வாழ்க்கையை குறித்துப் பேசுகிறது. வாழ்க்கையில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகள், சம்பவங்கள் இலக்கியத்தின் கருவாக அமைகின்றன. விமர்சனமோ இலக்கியம் குறித்து பேசுகிறது; இலக்கியம் மூலமாக வாழ்க்கையை, அதன் நிகழ்ச்சிகளை, அதன் சம்பவங்களை மறைமுகமாகக் கவனிக்கின்றது; மேலும் மற்றொரு விமர்சனம் குறித்தும் பேசுகிறது. வாழ்க்கையை நேரடியாகக் கவனிக்கும் நாடகமோ, கவிதையோ, நாவலோ இலக்கியமானால், அதையே மறைமுகமாகக் கவனிக்கும் விமர்சனமும் ஏன் இலக்கியமாகக் கூடாது? இலக்கிய நூல் தார்போட்ட ரஸ்தா என்றால், விமர்சனம் அதனோடு ஒட்டிய நடைபாதை எனலாம். ரஸ்தா செல்லுமிடத்திற்கு நடைபாதையும் ஒட்டிச் செல்லவேண்டுமல்லவா?

ஆனாலும் விமர்சனமும் இலக்கியமாகுமா என்பது குறித்து கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. விமர்சனம் என்றாலே சர்ச்சைகள், தாக்குதல்கள் என்றெல்லாம் வீண்பிரமை தோன்றிவிட்ட இந்தக் காலத்திலே விமர்சனம் இலக்கிய அந்தஸ்து பெறுவது என்பது கடினமாயுள்ளது. தரமான கடிதங்களும், பிரயாணக் கட்டுரைகளும், பிரசங்கங்களும்கூட இலக்கியத்தின் தகுதிபெறும் இந்நாட்களிலே வியர்சனமும் இலக்கிய அங்கமாக நிச்சயம் மாறும்.

வாசகனின் ஒரு முக்கியமான வேலை, ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனது படைப்பைப் பற்றியதாகக் கொள்வோம். அந்த வாசகனின் முதல் வேலை ஆசிரியரைப் பற்றியதேயல்லாமல் அவனது படைப்பைப் பற்றியதல்ல என்று ஆகிறது. துப்பறியும் கதைகளுக்காக ஸ்டான்லி கார்ட்னரைத் தேடிச் செல்லுகிறான் வாசகன்; அலெக்ஸாண்டர் டூமாஸைத் தேடிப்போகிறான். நன ஒட்டக் கதைகளுக்காக வர்ஜீனியா உல்ஃப், டாரதி ரிச்சர்ட்ஸன், ஜேம்ஸ் ஜாய்ஸ் போன்றவர்களை நாடுகிறான்; விஞ்ஞானக் கதைகளுக்காக வெல்ஸ், வெர்னி போன்றவர்களை எதிர்பார்க்கிறான். சமூகக் கதைகளுக்காக தாக்கரே, கோல்ட்ஸ்மித் போன்றவர்களை நாடிச்செல்லுகிறான். பொதுவாக, ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் படைப்பை—மற்ற ஆசிரியரதையல்ல—அறிந்துகொள்ள முற்படுகிறான் வாசகன். அதோடுமட்டுமல்ல; அப்படி அறிந்துகொள்ள முற்படுவதும் மற்றவனுக்காக அல்ல, தனக்காகவே. அப்படியானால் 'வாசகனுக்கும் எழுத்தாளனுக்கும் இடையே தரகன் போன்ற விமர்சகன் எதற்கு?'' என்று கேட்கத் தோன்றுகிறது. ஒரு எழுத்தாளனைப் பற்றியோ அல்லது அவனது படைப்பைப் பற்றியோ மற்றவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை வாசகன் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்? அப்படி அறிந்துகொள்வதில் காலத்தை ஏன் வீணடிக்க வேண்டும்? அந்தக் குறிப்பிட்ட புத்தகம் குறித்து இவர் ஏன் இப்படி எழுதியுள்ளார் என்று விளக்கி வேறொரு புத்தகமும் வரும். இப்படியே புத்தகங் குறித்த விமர்சனப் புத்தகங்களும் அவை குறித்து மற்றும் பல விமர்சனப் புத்தகங்களும் கணக்கிலடங்கா. இப்படியே புத்தகங்கள் வந்தவண்ணமிருக்க ஒரு வாசகனுக்கு சில சமயங்களில் ஓர் ஆசிரியர் குறித்து நேரடியாகத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய்விட ஏதுவுண்டு. விமர்சனம் மூலம் ஒரு ஆசிரியரைத் தெரிந்துகொள்ளும் வாசகன், ஆசிரியர் குறித்து நேரடியாகத் தெரிந்துகொள்ள மாட்டான்; விமர்சகன் வழியாகத்தான்—இரண்டாம் மனிதன் வழியாகத்தான்—தெரிந்துகொள்வான். இன்னும் சில சமயங்களில் மூன்றாம் மனிதன் மூலமாகவும் தெரிந்துகொள்ளுகிறான் எனலாம். விமர்சன நூல்கள் பெருகிவிட்ட இந்த நாட்களிலே மேற்கத்திய இலக்கியத்தில் இது சர்வசாதாரணம். ஷீரர் என்பவர், மில்டன் எழுதிய 'இழந்த சொர்க்கம்' என்ற நூலை ஆராய்ந்தார். அவருக்குப் பிறகு, ஷீரர் எப்படி மில்டனை (அவரது இழந்த சொர்க்கத்தை) ஆராய்ந்தார் என்பது குறித்து மத்யூ அர்னால்ட் ஆராய்ந்தார். இதில் ஷீரர் என்பவர் மில்டன் குறித்து என்ன முடிவுக்கு வருகிறார் என்று அர்னால்டு எப்படி நினைக்கிறார் என்பதை வாசகன் உணருகிறான்—அதற்கு அவனுக்கு வாய்ப்பேற்படுகிறது. இந்த வழியில் மில்டனை அணுகும் வாசகன், மில்டன் எழுதிய 'இழந்த சொர்க்கத்தை அனுபவிக்கவில்லை. ஷீரர், அர்னால்டு ஆகியோரின் அனுபவத்தைத்தான் தெரிந்துகொள்ள முடிகிறது அவனால். இதனால் மில்டன் ஒதுக்கப்படுகிறான்; காலம் கடக்கிறது. அப்படியானால், வாசகனுக்கும் அவன் விரும்பிய ஆசிரியருக்கும் (மில்டன்) இடையே வந்த ஷீரர், அர்னால்டு (விமர்சகர்கள்) போன்றவர்கள் பெருந்தடையாய் அமையவில்லையா? என்ற கேள்வி எழுகிறது.

மேலே கூறப்பட்டன போன்ற பல எதிர்ப்புகள் விமர்சனம் குறித்து நேர்ந்தாலும், விளக்கம், விமர்சனம் போன்ற நூல்களின் அர்த்தமற்ற தாக்குதல்களால் படைப்பு இலக்கியங்களே மூடப்பட்டு அழிந்து போய்விடக்கூடிய நிலையில் உள்ள இந்தக் காலத்தில் அவை குறித்து போதுமான கவனமும் எச்சரிக்கையும் வேண்டுவன அவசியம்.

வாழ்க்கையோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள இலக்கியத்திற்கும், இலக்கியத்தோடு தொடர்புகொண்டுள்ள இலக்கியத்திற்கும் இடையேயுள்ள பாகுபாடு ஒரு செயற்கைத் தன்மை வாய்ந்ததாகும். வாழ்க்கையில் எவை

யெவை நம்மை பரவசமூட்டுகின்றதோ, நெகிழ வைக்கின்றதோ, சிந்திக்கவைக்கின்றதோ, அவைகள் எல்லாம் இலக்கியக் கருவாய்—இலக்கியமாய்—அமைக்கப்படுகின்றன. ஆனுல் தனி மனிதப் பண்பு வாழ்க்கையில் மிக முக்கியமானதொன்ருகும்; அதிக அளவில் நம்மை கவரக்கூடியதுமாகும். எனவே, எந்த விமர்சகனும், படைப்பாளியின் தனி மனிதப் பண்பை அவனது எழுத்துக்களின் வாயிலாக ஆராய முற்படின், உண்மையிலேயே எப்படி எழுத்தாளன் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டிருந்தாஞே அதே வகையில் தானும் வாழ்க்கையோடு ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுகிருன். உன்னதமான உயரிய ஒரு நூல், ஒரு உயரிய செயலைப்போல் வாழக்கூடியது. வாழ்க்கையின் திருப்பங்களில் சம்பவிக்கும் பல காரியங்கள் முக்கியமானதாய் அமைவனபோல், கலையின் செய்முறைகளும் முக்கியமானவைகளாகும். வில்லியம் வாட்சன் என்பவர் ஒருமுறை இதையே கூறினர். 'மற்ற கவிகளின் பாடல்களிலிருந்துதானே தாங்களும் தங்கள் பாடல்களுக்குரிய கருத்துக்களை எடுத்துக் கொள்ளுகிறீர்கள்?' என்று கேட்கப்பட்டபொழுது, 'பெரிய கவிகளை நான் கருவாகக்கொண்டேன். அவர்கள் இயற்கையின் பெருமையைத் தோண்டி எடுத்தே பாடியுள்ளனர்' என்று வாட்சன் கூறுகிருர். பெரிய கவிகளின் மூலமாகத் தானும் இயற்கையுடன் தொடர்பேற்படுத்திக் கொண்டதாக அவர் தெரிவிக்கிருர். அவருடைய கவிதைகளும் இலக்கியப் படைப்புகளாகப் பரிணமித்தன. இந்தப் போக்கையே விமர்சன நூல்கள் கூறித்தும் கொள்ளலாம்.

இதுபோன்றுதான் விமர்சனமும் வாழ்க்கையோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள இலக்கியப் பிரிவுகளின் வழியாக தானும் வாழ்க்கையுடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுகிறது. கலை தன்பொருளையும் ஊக்கத்தையும் வாழ்க்கையிலிருந்து பெறுவதுபோலத்தான் விமர்சனமும் பெறுகிறது. வாழ்க்கைக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் விமர்சகனும் தன் காரியத்தைச் செய்கிருன். கலையின் பல பிரிவுகள் தத்தம் வழிகளில் இலக்கியத்வம் அடைந்ததைப் போலவே விமர்சனமும் தன் வழியில் இலக்கியத்வம் அடைகிறது.

மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையே அநுபவ முதிர்ச்சி எனவேண்டும். அநுபவத்தின் பழமாகத் தோன்றினவே இலக்கியமும் மற்றுமுள்ள நுண்கலைகளும் ஆகும். இலக்கியத்தின் வேலை அந்த அநுபவத்தை இன்னும் பெருக்குவதாகும்; அந்த அநுபவத் தைத்தான் வாசகன் நுகரும்வண்ணம் விமர்சனம் எடுத்துத் தருகிறது. இலக்கியப் படைப்பை ஆராயும்விமர்சனம் அதை வாழ்க்கையின் ஓர் பகுதியாக—அம்சமாக—எண்ணிப் பார்த்தே செய்கிறது; அதன் தனித்த இயல்பை வாசகனுக்கு உணரவைக்கிறது. இலக்கியமானது சில சமயங்களில் வாழ்க்கையை விவரிப்பதாகவோ அல்லது வாழ்க்கையை விமர்சித்து அது இலக்கியமாவதுபோல்,மறைமுகமாக-இலக்கியம் மூலமாக—வாழ்க்கையை விமர்சனம் தன்னளவில் அலசுகிறது. அநுபவம் நுட்பமாக மாற மாற இலக்கியத்தின் தரமும் கூடுகிறது; அந்த நுட்பமான அனுபவத்தை ஆராய ஆராய விமர்சனமும் இலக்கியமாக மலர்கிறது. தாவர சாஸ்திரத்தில் உதாரணமாக, பூவின் நிறம், அமைப்பு போன்ற புறத் தோற்றங்களை விளக்கிக் கூறும் இயற்கை உருவ ஆராய்ச்சிப் பகுதி ஒன்றும், அதற்கான அடிப்படை அம்சங்கள் யாவை, உள்ளமைப்பு முறை எப்படி என்பன போன்ற காரணங்களை ஆராயும் உடலாக்கப் பகுதி ஒன்றும் உண்டு. ஆயினும், இவ்விரண்டுமே தாவர சாஸ்திரத்தின் பிரிவுகளாக சமநோக்கில் வைத்துப் பேசப்படுகின்றன. அதுபோலத்தான் வாழ்க்கையைப் பற்றியும்—அதைக் கூறும் பகுதியும் அதை விளக்கும் பகுதியும் பணியாற்றுகின்றன.

இலக்கியம் குறித்து மாத்யூ அர்னல்டின் கொள்கை 'அது வாழ்க்கை விமர்சனம்' என்பதாகும். (இது குறித்து பலர் பலவிதமாக விமர்சித்துள்ளனர். அது நமக்கு இங்கு வேண்டப்படாதது.) மேலும், சுயாநுபவமே எல்லா உண்மையான இலக்கியத்திற்கும் அடிப்படையாகும் அதிலும், தனி மனிதப் பண்பு அல்லது ஆட்பண்பு என்பதே ஒரு பெரும் இலக்கிய நூலுக்கு மேன்மையையும் உயிரோட்டத்தையும் அளிப்பதாகக் கருதப்படுகிறது. இந்த குணநிசயங்கள் விமர்சனம் குறித்தும் பொருந்தும். ஏற்கனவே கூறியது போல் விமர்சனம் மறைமுகமாக வாழ்க்கை குறித்து பேசுகிறது—விமர்சிக்கிறது. ஒரு இலக்கிய நூல் தன் உள்ளத்தில் எவ்விதச் சலனத்தைத் தோற்றுவித்தது என்பதைச் சுயானுபவத்தில் விமர்சகன் தன் நூலில் தருகிருன். அப்படித் தரும்பொழுது அதில் அவனையறிந்தோ அறியாமலோ, தனது கலாசாரம், காலம், அறிவு போன்றவைகளை அந்நூலில் நுழைத்து விடுகிருன். இலக்கிய நூலின் குணநிசயங்களும் அங்கு தம்மிச்சையாகக் குடியேறிவிடுகின்றன.

இலக்கியத்தின் பின் மறைந்துள்ள முக்கியமான தூண்டுதல்கள் நான்கு என்று ஹட்ஸன் கூறுகிருர். (1) நாம் உணர்ந்ததை—நினைப்பதை—மற்றவர்களுக்கும் அப்படியேக் கூறவிரும்புகிறோம். நாம் என்ன நினைக்கிறோம், எப்படி உணருகிறோம் என்பனவற்றை மற்றவர்களும் தெரிந்துகொள்ளும் பொருட்டு உள்ளார்ந்து தூண்டப்படுகிறோம். (2) மற்றவர்களிடத்தும் அவர்களது செய்கைகளிலும் நமக்கு ஒருவிதமான அக்கறை இருக்கிறது. மற்றவர்கள் என்ன செய்கிருர்கள், எப்படி வாழ்கிருர்கள், அவர்களின் நோக்கம் என்ன, அவர்களுடைய உணர்ச்சிகள் யாவை, அவற்றின் தன்மை எப்படி, அவர்களுக்கும் அவர்களது சூழ்நிலைகளுக்கும் உள்ள பந்தம், ஒப்புமை, உறவு முறை போன்றவைகள் யாவை என்பன போன்ற பல விஷயங்களை வாழ்க்கைச் சூழ்நிலையில் கவனிக்கிறோம். (3) நாம் வாழும் இவ்வுலகின் உண்மைத் தோற்றத்திலும், மெய்மையிலும், நாம் எதிர்

காலத்தில் வாழவேண்டிய உலகம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கற்பனையில் எண்ணிப் பார்க்கும் கற்பனை உலகிலும் நமக்கு ஒரு தனி யான அக்கறை இருக்கிறது. (4) எங்கு அழகுணர்ச் சியின் தூண்டுதல் இருக்கிறதோ அதை அழகழ கான வடிவத்தில் பிடித்துத்தர—சமைக்க—ஆசைப்படுகிறோம். இந்த முக்கியமான நான்கு தூண்டுதல்களே இலக்கியத்தின் தோற்றத்திற்கு அடிப்படை என்று கூறி ஹட்ஸன் இதையே இன் னும் நுண்மையாக ஆராய்கிறார். இந்த வகையில் தோன்றிய இலக்கிய நூலை விமர்சனம் ஆராய் கிறது. மற்றவர்மீதுள்ள அக்கறையில் எழுத்து தோன்றுவதுபோல், அந்த எழுத்தின்மீதும் அதன் நயங்களின் மீதுமுள்ள அக்கறையில் விமர்சனம் தோன்றுகிறது. உண்மையில் காணப்படும் உலகை யும், எதிர்காலத்தில் நாம் உருவாக்கவேண்டிய உலகையும் குறித்து எழுத்து பேசுவது போலவே, தோன்றியுள்ள எழுத்தையும் தோன்றவேண்டிய எழுத்தையும் குறித்து விமர்சனம் பேசுகிறது. திட்டம் உருவாகும்பொழுது பல வல்லுநர்கள் ஒன்றுகூடி மாதிரிகளை வைத்து ஆராய்ந்து திட்டம் தீட்டுவதுபோல், விமர்சனமும் இருக்கும் நூல் களைக் கொண்டு அலசி ஆராய்ந்து தோன்றவேண் டிய நூல்களுக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரு கிறது; இருப்பதிலுள்ள குற்றங் குறைகளைச் சுட் டிக் காட்டி அவை களையப்படுவதற்கான வழிகளை யும் கூறுகிறது. அப்படிக் கூறுவதையும் திட்ட மிட்டு அழகுணர்ச்சியோடு ஒரு கட்டுக்கோப்பான முறையில் கூறுகிறது. இவ்வளவையும் அந்த விமர் சகன் தன்னளவில் எப்படியுணர்ந்தானோ—எப்படி ஏற்றுக்கொண்டானோ அதன்படி வெளியிடுகிறான். இலக்கியத்தின் அடிப்படையில் மறைந்திருக்கும் குணங்களே விமர்சனத்திற்கும் அடிப்படையாய் அமைந்துள்ளன என்பதில் தவறில்லை.

மேற்கூறிய அடிப்படையில் அமைந்த இலக் கிய நூலில் முக்கியமாக ஆசிரியர் மூன்றுவித கரு மூலங்களை நுழைத்துவிடுகிறார். அறிவாற்றல், உணர்ச்சி, கற்பனாசக்தி ஆகியவைகள் அந்த நூலைத் தரமான இலக்கியப் படைப்பாக மாற்று கின்றன. இந்த மூன்றில் முதலாவது விமர்சனத் திற்கு அதிக அளவில் தேவைப்படுகிறது. மற்ற இரண்டையும் அஸ்திவாரமாகக் கொண்டே விமர் சனக் கட்டிடமும் எழுப்பப்படுகிறது எனலாம்.

காலத்தின் கொள்கைகளையும் எழுச்சியையும் பிரதிபலிப்பது இலக்கியத்தின் முக்கியமான வேலை களுள் ஒன்று. காலத்தின் ஆற்றல் பல கால்வாய் களின் வழியே பாய்கின்றது; அக்கால்வாய்களில் ஒன்றே இலக்கியம் எனலாம். காலத்தின் போக் கைச் சார்ந்தே ஆசிரியன் செயல்படுகிறான். காலம் அவனை ஒரு குறிப்பிட்ட விதத்தில் பக்குவப் படுத்துகிறது. அந்த ஆசிரியன் குறித்து பிற்காலத் தில்—வேறு ஒரு காலத்தில்—ஒருவன் விமர்சிக் கிறான். அந்தக் காலமும் விமர்சகனைத் தன்போக் கில் பக்குவப்படுத்துகிறது. அந்தப் பக்குவத்தில் இலக்கியத்தை ஆராயும்பொழுது விமர்சன நூலில் தன் காலத்தையும் அதன் எண்ண ஓட்டங் களையுமே அமைத்துவிடுகிறான். எனவே, இலக் கிய நூலைப்போலவே விமர்சன நூலும் காலத்தை ஒட்டி காலத்தைப் பிரதிபலிப்பதாக அமைகிறது, சூரிய ஒளியை நிலவு பிரதிபலிப்பது போல.

இலக்கிய நூலின் முக்கியமான வேலை அனு பவத்தைப் பெருக்குவதும் விஸ்தரிப்பதும் ஆழப் படுத்துவதுமாகும் என்று பேசப்படும். அதே நேரத்தில் வாசகனுக்கு இன்பம் பயப்பதுவும் ஆகும். இந்த வேலைகளையும்தான் விமர்சனம் செய் கிறது. கவிதைக்கு விளக்கம் கூறும் விளக்க உரை தனிக் கவிதையாகாவிட்டாலும், கவிதையோடு ஒன்றிவிடுவது போல, விமர்சனமும் இலக்கிய நூலோடு இலக்கியத்தின் அங்கமாக ஒன்றிவிடு கிறது எனத்தான் கூறவேண்டும்.

எல்லா இலக்கிய நூல்களுக்கும் பொதுவான அடிப்படைகள் பலவற்றுள்ளும் ஆட்பண்பும் ஒன் றாகும். அதன் அடிப்படையிலும் விமர்சனத்தில் ஆட்பண்பை நாம் காண இயலும். ஓர்ட்ஸ் வொர்த், பைரன், ஷெல்லி, கீட்ஸ் ஆகிய இலக்கியாசிரியர்களின் நூல்கள் குறித்து அர் னால்டு தம் 'எஸ்ஸேஸ் இன் க்ரிடிஸிஸம்' என்ற நூலில் ஆராய்கிறார். அந்நூல் ஓர்ட்ஸ்வொர்த் போன்ற இலக்கிய ஆசிரியர்கள் குறித்தும் அவர் தம் நூல்கள் குறித்து மட்டுமே நமக்கு உணர்த்து வதில்லை. இன்னும் ஒருபடி மேலே சென்று விமர் சகன் குறித்தும் காட்டுகிறது. விமர்சகனின் எண் ணம், அவன் வழிகள், கொள்கைகள் யாவுமே அந் நூலில் காணக் கிடைக்கின்றன. விமர்சன நூல் என்ற அளவில் நாம் 'எஸ்ஸேஸ் இன் க்ரிடிஸிஸம்' என்ற நூலை எடுத்துக் கொள்ளாமல் அதையும் ஒரு தனி இலக்கிய நூலாகவே எடுத்துக் கொள்ளு கிறோம்.

இலக்கியப் படைப்பாளன் தன் நூலில் கலைத் திறத்தை மறைத்துவைக்கிறான்; விமர்சகன் அதைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்து யாவரும் நுகர்ந்து மகிழ வாய்ப்பேற்படுத்தித் தருகிறான். இயற்கையில் மறைந்து கிடக்கும் மர்மங்களை இலக்கியாசிரியன் கண்டுபிடிக்கிறான்; அதைப்போலவே, இலக்கிய நூலில் மறைந்து கிடக்கும் கலை நுணுக்களையும் விமர்சகன் கண்டு பிடிக்கிறான். ஒளிந்து கொள்பவன் ஒருவனானா லும், அவனைக் கண்டுபிடிப்பவன் மற்றொருவனானா லும் 'கண்ணாமூச்சி' என்ற ஒரே விளையாட்டில் அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்த தோழர்கள் தானே.

எல்லா உயர்ந்த இலக்கிய நூல்களும் டைடாக்டிக் என்பதாக இருக்கும். ஒரே நேரத் தில் தேர்ந்த பிலாசபராக இல்லாமல் ஒருவன் பெரிய கவிஞனாக இருக்க முடியாது என்று கோல் ரிட்ஜ் கூறுகிறார். பிலாஸபி முதன்மையானது, அதிலிருந்து பெறப்படும் கவிதை இரண்டாம் பட்சமானது என்று ப்ரௌனிங் கூறுகிறார். இதே கருத்தை வசன இலக்கியம் குறித்தும் உண்மை எனக் கொள்ளலாம். இலக்கியப் படைப்பின்

மற்ற அம்சங்களோடு இந்த டைடாக்டிஸிஸமும் சேர்ந்து அந்த இலக்கியப் படைப்பை உன்னத மாக்குகிறது. இவைகளை ஆராய்ந்து முடிவாக எல்லாவிதக் கலையும், உண்மையில் மேன்மையான வையாக இருக்கவேண்டுமானால், அவைகள் நீதி போதனையை ஏதாவது ஒருவகையில் செய்வதாக இருக்கவேண்டும் என்கிறார் ஹட்ஸன். விமர்சனத் துறையில் இதையும் பார்க்கலாம். இக்குணங்களை ஆராய்ந்து வெளிக்கொணரும் விமர்சனமும் நீதி போதனை செய்வதாகவே படுகிறது. புத்தகங் களின் ஸ்தூல உருவம் இல்லாவிட்டாலும், பல புத்தகங்களைக் கரைத்துக் குடித்தவரை 'நட மாடும் நூலகம்' எனக் கூறுவதைப்போல—விருப்பு வெறுப்பற்று நிச்சலனமான ஆண்டவன் குணம் நோக்கிக் குழந்தையையும் தெய்வமாகக் கருதி கொண்டாடுவதைப் போல.

எல்லா இலக்கிய நூல்களும் நேர்மையை உடையனவாக இருக்கவேண்டும். கவிஞன் என்ன சொல்கிறான், எப்படிச் சொல்கிறான் என்பதோடு, அவன் சொல்லியிருப்பது எவ்வளவு தூரத்திற்கு உண்மையானதாக இருக்கிறது என்பதும் முக்கிய மாகும். அந்த உண்மையைப் பல கோணங்களில் தனக்கென உள்ள வழிகளில் ஆராய்வதே விமர் சனத்தின் ஒரு வேலையாகும். அப்படி ஆராயும் விமர்சனமும் 'உண்மை' வாய்ந்ததாக இருக்க வேண்டும். போலியானால் வாசகனுக்கும் எழுத் தாள உலகிற்கும் நன்மையில்லை. உண்மையான—நேர்மையான—விமர்சனம் இலக்கியத்தைப் போலவே சிரஞ்சீவத்வம் அடைகிறது; இலக்கிய மாகப் பரிணமிக்கிறது.

அழைப்பு

வீர வேலுசாமி

கானற் கரிசலில் கருவேல நிழல் தேடி
வாரறுந்த கால்செருப்பு கக்கத்தில்
காலம் தந்த வினைப்பயன் தலையில்
குருதி நீரைக் கதிரவன் உறிஞ்ச
சரத்தை நனைக்க நீரைத் தேடி,
நிழலை நாடி,
போகிற வேளையிலே—
'ஏ..... ஏ... ஏ !'
எழுதிக்கில் எத்திக்கின் குரல் இது ?
எங்கோ தொலைவில் கானல் அலைமறைவில்
எழும்பி வருகின்ற குரலுக்கு ஏமாந்து
செவிமடுத்து,
ஒற்றை மாராப்பு காற்றெடுக்க
ஊற்றொழிந்த காலி தனப்பை ஊசலிட
தலைச் சுமை கண் பிதுக்க
தள்ளாடித் திரும்ப—
'ஏ, கிழவி ! இன்னும் ஆசையா ?
முதுகின் வெடிப்பு செந்நீர் சொரிய
முக்கி, முணுமுணுத்துச் சேர்த்த
சுமக்கொணாச் சுமையோ தலையில்
சும்மாடு கொள்ளாது இனிமேல்.
ஓடு...ஓடு...!
கருத்த கிளை வீசி காத்திருக்கும்
கருவேல நிழலுண்டு – கரம்பை மணக்கும்
குட்டை நீருண்டு !'
கானற் கரிசலிலே
கருவேல நிழல்தேடி....

எங்கோ மழை?......

ஸ்ரீ சோ. வேணுகோபாலன்

கருங்கடல்
வெண்மலை
காலனின் கணக்கறும்
மரணப் பொறிகளில்
இருவிதம்...
கருவியால் மூச்சுக்குக்
கவசம் இட்டு
காலடிச் சுவடு
முடியிலும் அடியிலும்
பதிக்கப்
புடைத் தெழும்
சில நெஞ்சம்—
மானுடப்
பெருமை !
....
இடைப்படும்
தரை தவழ்ந்து
இயற்கையை
எதிர்த்திடும்
உரம் பெறு இதயங்கள் பலகோடி !
....
எதிர்ப்பிலாது
எமன்கால்
பட்டழியும்
குறியின்றி
ஊறும்
நினைப்பின்றி
வாழும் (?)
எறும்புகள் !

உங்கள் காதுக்கு

ஒரு கூடை ஏடுகள் !

பத்திரிகைத் தொழிலைப் பற்றிய புள்ளி விபரங்கள் வெளியானபோது, படிக்கத்தெரிந்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தினசரிப் பத்திரிகைகளின் தொகை தமிழ் நாட்டில் பெருகவில்லை என்ற குறை எழுந்தது. அண்டை மாநிலமான கேரளத்தின் ஒப்புநோக்கான விபரங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது அந்தக் குறை பெரிதாகத் தோன்றி, நிவர்த்திக்கப்பட வேண்டிய ஒன்றாகவே பலருக்கும் பட்டிருக்கும்.

தினசரிகளின் நிலை எப்படியாயினும், சஞ்சிகைகளின் தொகையைப் பற்றி அப்படிக் குறைப்படுவதற்கில்லை. மாதம் மும்மாரி பெய்வது பொய்த்தாலும் மாதம் மூன்று புதுப் பத்திரிகைகளாவது முச்சந்திக் கடைகளில் தொங்கத் தவறுவதில்லை. விடுதலைபெற்ற நாட்டில், புதிது புதிதாக முளைவிட்டுக் கொண்டிருக்கும் பிரச்னைகளைப் பலரும் புரிந்துகொள்வதற்கு வழி செய்யும் வகையில், துறைகளாகத் தேர்ந்தெடுத்து, தனி ஈடுபாடு காட்டும் பத்திரிகைகள் வெளிவருவது வரவேற்க வேண்டிய விஷயம். ஜோசியத்திற்காக மட்டும் தனி ஏடு தோன்றுவதோ, மோட்டார்த் தொழில் தொடர்பான சங்கதிகளுக்காக மட்டும் ஒரு பத்திரிகை குரல் கொடுப்பதோ நியாயமானதென்று நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் இன்று அம்மாதிரி முயற்சிகள் அதிகம் இல்லாததைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். வெளிவரும் ஏடுகள் அத்தனையும் 'கலை, இலக்கிய, அரசியல், ஆன்மீக, சமூக சீர்திருத்த' ஏடுகளாகப் புறப்படுவதை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? ஒரே இதழின் முதல் பக்கத்தில் சங்கராச்சாரியாரின் ஸ்ரீமுகத்தையும், அடுத்த பக்கத்தில் சரோஜாதேவியின் 'திருமுகத்தையும்' பிரசுரித்து 'ஜனநாயக சோஷலிசம்' பண்ணுகிற வித்தை இன்றைய தமிழர்களுக்கு நன்றாகக் கைவந்திருக்கிறது. இரண்டு சினிமாச் செய்திகளைப் போட்டால் கலை, இரண்டு கதைகளைப் போட்டால் இலக்கியம், இரண்டு பத்திரிகைச் செய்திகளை மறுபிரசுரம் செய்தால் அரசியல், ராசி பலன் போட்டால் ஆன்மீகம், இரண்டு வரிகள் காரமாக எழுதினால் சமூக சீர்திருத்தம். எல்லாம் முப்பது பக்கங்களில் முடங்கிவிடுகிறது. 'தூய'பணிக்கு வேறென்ன வேண்டும்? ஒவ்வொரு துறையிலும் அவ்வப்போது முன்னணியில் நிற்பவர்களில் இரண்டு கோஷ்டிகளைப் பிரித்துக் கொண்டு இரு தரப்புக்கும் 'பொது அளவு' தயாரித்துக்கொண்டு எவருக்கும் சார்பு இல்லாத பாவனையில் சாமர்த்தியமாகச் செய்தி தருவதுதான் 'நடுநிலைமை!' பத்திரிகை தர்மத்திற்குப் பங்கம் வராமல் பாதுகாக்க இதைவிடச் சிறந்த மார்க்கம் உண்டா? என்ன இருந்தாலும் நாம் மூளை உள்ளவர்கள் தான். அப்படித்தானே நம்மை மற்றவர்கள் பாராட்டுகிறார்கள்?

இன்று புதிதாகக் கிளம்பும் பத்திரிகைகள் இந்த மாதிரி வரையறையும் குறிக்கோளும் இல்லாமல் வருவது நடைமுறையின் தலைவிதி என்று சமாதானப் படுத்திக்கொள்ளலாம். ஆனால் பல ஆண்டுகளாக நடந்து; நின்று, நிலைத்துவிட்ட ஏடுகளும் இம்மாதிரிப் போக்குகளுக்கு இரையாவதுதான் விசித்திரம், சாபக்கேடு. புதுமை என்ற பெயரில் புளித்துப்போன உத்திகளைக் கையாளுவது கிடக்கட்டும், அதிலேகூட ஒன்றையொன்று பின்பற்றுவானேன்? 'கிழமைக் கதை', 'வண்ணக் கதை' என்ற தலைப்பில் ஒரு பத்திரிகை போட்டி வைத்தால் இன்னொன்று சும்மா இருக்குமா? 'மாவட்டக் கதை' வரவழைக்கும் அறிவிப்பு உடனே கிளம்பும். 'இன்றைய ஸ்பெஷல்' மாதிரி ஒவ்வொரு இதழிலும் ஸ்பெஷல் கதை தருகிற ஆசை ஒருவருக்கு வந்தால் மற்றவருக்கும் கூடவே தொத்தும். 'முத்திரைக் கதை' என்ற தலைப்புக்கு 'சிறப்புச் சிறுகதை' என்கிற உத்தரவாதம் ஈடுகட்டும். 'எங்கள் பத்திரிகையில் வெளிவரும் அத்தனையும் மணியான கதைகள்' என்கிற வேறொரு அறிவிப்பின் சூசனை இப்போதுதான் புரிகிறது. முத்திரைபெறாத கதையும் சிறப்பில்லாத சிறுகதையும் அங்கே இல்லை போலும்!

கதைகளை விட்டால், மற்ற அம்சங்களில்கூட இந்தப் போட்டியும் 'காப்பியும்'தான். ஒரு காலத்தில் எல்லாப் பத்திரிகைகளும் 'ராசி பலன்' போட்டன. இப்போது ஒரு சில ஏடுகளுக்கு மட்டும் அந்த 'ராசி' பலனளிக்கிறதைப் பார்க்கிறோம். இதிலே ஒரு வேடிக்கை, முற்போக்குப் பத்திரிகைகள்கூட 'ராசி பலன்' போடுவதை தவிர்க்க முடியவில்லை! அப்பால்,ஒரு பத்திரிகை 'பலசரக்கு' பகுதி ஆரம்பித்தால் அடுத்த பத்திரிகை உடனே 'பல்சுவைப் பக்கங்கள்' என்று துவங்குகிறது. அப்புறம் தனித் தன்மை என்ன வேண்டிக் கிடக்கிறது?

எல்லாவற்றிற்கும் மேலாக, பத்திரிகைகளின் அட்டை இருக்கிறதே அதைப் பற்றி தனிப் புராணமே படிக்கலாம். உள்ளடக்கத்தில் கொள்கை அளவில் மாறுதல் இருந்தாலும்கூட, அட்டைப் படத்தைப் பொறுத்த மட்டில் எல்லோருக்கும் ஒரே கொள்கைதான். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும்' ஏடானாலும் சரி, வெள்ளிவிழா ஆண்டிலிருந்து தமிழர்களைமேலும் பாக்யசாலிகள் ஆக்க உறுதி பூண்ட ஏடானாலும் சரி தமிழர்கள் 'ஒரு வரிகூட விடாமல் வாசிக்கக் கூடிய பத்திரிகையானாலும் சரி, தமிழர்களின் ஒரே 'குடும்பப் பத்திரிகை' ஆனாலும் சரி அட்டைப் படத்திலே ஆணையும் பெண்ணையும் சேர்த்துப் போடுவதிலே ஒருநோக்குப் படைத்தவர்களாகவே காட்சி அளிக்கிறார்கள். சில சமயங்களில் பெண் மட்டும் தனித்

திருந்தாலும் ஆணுக்கு அந்த 'உரிமை' அறவே கிடையாது! சங்க காலத் தலைவன்—தலைவியாக வந்தால் என்ன, டெர்லின்—நைலான் யுக நபர்களாகத் தோன்றினால் என்ன? நோக்கம் ஒன்றுதான். நமக்கும் புரிகிறது, அவர்களுக்கும் புரிகிறது. (சங்க கால நாயகியின் கொண்டைக்கும் ஸ்கூட்டர் மோகினியின் கொண்டைக்கும் எள்ளளவும் பேதம் இல்லை. என்னே, தமிழரின் மாறாத நாகரீகம்!)

இந்தப் பத்திரிகைகள்தான் பெரும் அளவில் வளர்ந்து, வளர்ச்சியைக் குன்றாத வகையில் பிடித்திருக்கப் பாடுபடவேண்டி இப்படி எல்லாம் செய்கின்றன என்றால், 'பரிசுத்தமான எண்ணங்களுடனும், தணியாத சத்திய வேட்கையுடனும் எல்லா இடங்களிலும் அறிவின் பிரகாசமும், உண்மையின் ஒளியும் துலங்க வேண்டுமென்ற, உயர்ந்த லட்சியத்துடனும்' சமீபத்தில் 'ஏற்றி வைக்கப்பட்ட' ஏடும் அட்டைப் படத்தைப் பொறுத்த மட்டில் விதிவிலக்காக அமையாதது துரதிர்ஷ்டமே. 'மணிக்கொடியின் மாண்பும், சரஸ்வதியின் முற்போக்கும்' இணைந்த முயற்சி என்று பறைசாற்றிக் கொண்டு புறப்பட்ட பத்திரிகையைப் பார்த்து இது மாண்பா அல்லது முற்போக்கா அல்லது இரண்டுமா என்று கேட்கத் தோன்றுகிறது. உள்ளே தரும் விஷயங்களின் மூலம் புதிய ஒளி வீசி பழைய இருளை அகற்றுவது கிடக்கட்டும், அட்டைப் படம் அன்றோ அந்த நம்பிக்கையை முதலில் ஊட்ட வேண்டும்?

சாகித்ய அகாடமியின் பிராந்தியச் செயலாளர் கே. எம். ஜார்ஜ் உரை நிகழ்த்தும்போது, நீண்ட நேரத்துக்கு வரிசையிட்டு தனது ஆலோசனைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தார். திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதற்கான வழிவகைகளை அறுதியிட்டுக் கூறினார். பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த எழுத்தாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ளூர ஆத்திரம்தான் பிறந்திருக்கும். 'சாகித்ய அகாடமியின் செயல்முறை செம்மையாக இல்லை' என்ற குற்றச்சாட்டை இத்தனை வருஷங்களாக காதில் போட்டுக் கொள்ளாத போது, இன்னொரு பரிசுத் திட்டம் உருப்பட யோசனை என்ன வேண்டிக்கிடக்கிறது?

கூட்டத்துக்குத் தலைமை வகித்த ம. பொ. சிவஞானம் தனது முடிவுரையில் இந்த விஷயத்தைப் பகிரங்கமாகவே வெளியிட்டு விட்டார். 'தமிழுக்குப் பரிசு இல்லை' என்று சொல்லி தமிழ் எழுத்தாளர்கள், அபிமானிகளை அவமானப் படுத்தும் சாகித்ய அகாடமிபோல் அல்லாமல், புதிய திட்டம் நன்றாக இயங்குமெனத் தான் நம்புவதாகச் சொன்னபோது மன்றம் ஆர்ப்பரித்தது. மேடையில் அமர்ந்திருந்த ஜார்ஜ் மனதில் என்ன பட்டதோ? அப்படிப் பட்டதைச் செயலாக்கும் வாய்ப்பு அவருக்கு எந்த அளவுக்கு உண்டோ? எப்படி இருந்தாலும், சாகித்ய அகாடமி பற்றி சமயம் கிடைத்தபோதெல்லாம் ஊதிக்கொண்டிருந்தால் ஒரு நாள் விடியாமலா போகும்?

சு. ச.

ஊருக்கு உபதேசம்

''சோவியத் நாடு'' பத்திரிகையின் நேரு பரிசுத் திட்டத் துவக்க விழா சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. இந்தியா பூராவுக்குமான திட்டம் இது. இந்திய—சோவியத் உறவை வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்த நாட்டு வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கும் எழுத்துக்களை இந்திய மொழிகளில் வரவழைத்து, சிறந்தவற்றிற்கு ஆண்டுதோறும் பரிசளிக்கப் போகிறார்கள்.

அந்தந்த மொழிகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுப்பதிலேயே சாகித்ய அகாடமியினர் படும் பாடு எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. எல்லா மொழிகளுக்கும் பொதுவான தர அளவை நிர்ணயிப்பதென்பது நினைப்புக்கே சிரமமாகத்தான் இருக்கிறது. பதினைந்து மொழிகளிலும் மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை நடத்துவது போன்ற, சிக்கல் நிறைந்த சமாசாரம் இது. ஆனால் உத்தியோகம் அளிப்பது வேறு, பரிசு கொடுப்பது வேறு. யாருக்காவது பரிசைக் கொடுத்து, திட்டத்தை வருஷந்தோறும் உயிருள்ளதாக வைத்துக்கொண்டிருக்கலாமே.

சென்னையில் நடந்த துவக்க விழாக் கூட்டத்தில் சுவையான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

பேனா என்ன சாதிக்கும்?

வாள் ஜடசக்தியின் அறிகுறி, பேனாவோ உயிர் சக்தியின் உண்மை வீறு. வாள் பெரும்பாலும் பெரிய பெரிய நாகரீகங்களை உடைத்துத் தள்ள மட்டுமே பயன்படும்; பேனா ஒன்றுதான் பழைய நாகரீகத்தை உடைப்பதென்றாலும் சரி, புது நாகரீகத்தை சிருஷ்டிப்பதாயினும் சரி, எது வானாலும் செய்ய வல்லது. பல்லவர்களின் ஆட்சியின் கீழ் பதுங்கிக் கிடந்த தமிழர்களை ஒரே யொரு நூற்றாண்டுக்குள், கம்பனது ராமாயணம் தட்டி யெழுப்பித் தலை நிமிரச் செய்து விட்டது. அமெரிக்காவின் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதற்கு 'அங்கிள் டாம்ஸ் கேபின்' என்னும் ஒரே நாவல் தான் விதை போட்டது. ஜெர்மானிய தத்துவ சாஸ்திரி நெயட்ஸின் நெருப்புவார்த்தைகளே சென்ற மகாயுத்தத்திற்கு அடிகோலியது என்று கூறலாம்.

ச. து. சுப்ரமண்ய யோகி.
(சுதந்திரசங்கு—1934)

யார் துணை ?

ந. முத்துசாமி

இது நேற்று நடந்தது.

ஒரே இருட்டு. கும்மிருட்டு. அழுகத் தேங்காய்க்குள்ளே நுழைஞ்சு பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படி. பிரஸ்ஸிலே மிஷின் மேன் சிலிண்டர் இங்கைத் தொடச்சுப் போட்ட பேப்பர் மாதிரி கீறு கீறு வானத்திலே கொஞ்சம் வெளிச்சம்.

நான் தூங்கிக்கொண்டிருக்கேன். நல்ல தூக்கம். நல்ல தூக்கமா? என்றைக்கைய்யா நல்ல தூக்கம் தூங்கினேன்! ஏதோ தூங்குகிறேன். விழித்துக் கொண்டிருப்பதைப் போல ஒரு தூக்கம். நடுநிசி.

''சார் தந்தி.''

''கதவு ஓட்டை வழியா போட்டுட்டுப் போய்யா!''

என்றோ என்றைக்கோ—யார் கண்டா?—சொன்னேன். ''டேய், உங்க ஊர்லே ஒரு வேலை இருந்தா பாருடா. இங்கே பசங்க ரொம்ப மோசம். நூத்தி ஐம்பது ரூபாய் தரேன்கிறான். நாலு நாள் லீவு போட்டா மூணு நாள் சம்பளத்தே புடிக்கிறான். என்னடான்னு இஷ்டமில்லேன்னு ஓடுங்கிறான். நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு முதலாளிங்கறான். பெட்டியிலே கருப்புப் பணம். கள்ளக் கணக்கு எழுத எனக்கு கைவந்து போச்சு.''

'உடனே கிளம்பு. நாளை, மறுநாளைக்குள் எதிர்பார்க்கிறேன். அவசரம்.'

இதுவா தந்தி. கிட்டா கல்கத்தாவிலே இருக்கான். டில்லியிலேருந்து தந்தி. பய என்னிக்கி அங்கே போனான். பக்கத்து வீட்டிலே எவனாவது என் பேருள்ளவன் இருக்கானா? இல்லே...நானே தான்.

ஓடினேன்...ஓடினேன். குதிகால் தரையில் வேறான்றிப் போச்சு. ஆணிவேர் அறுமல் எப்படி செடியைப் பிடுங்குவது—தண்ணி ஊத்தி புடுங்கினா? உளை விழுந்த நிலம் மாதிரி பொத பொதன்னு சேறு. உழப்போன மாடு உள்ளே புதையுது. கொம்பு தெரியுது. மூக்கணாங்கயித்தைப் புடிச்சு மேலே தூக்கு.

மெதுவாய் டெலிபோன் பூத்துக்குப் போய் விட்டேன். அழகான சின்ன அறை. உள்ளே இருந்து பேசினால் வெளியே தெரியாது. உள்ளே போனதும் கதவு சாத்திக் கொள்கிறது. வெளியே சிவப்பு எழுத்து எரியுது. 'உள்ளே ஆள் இருக்கு.' இந்தியாவிலே விஞ்ஞானம் முன்னேறிப் போச்சு. ஒரு பட்டனை அழுத்தினா மணி அடிக்குது. ரிசீவரைக் காதில் வைத்துக்கொண்டு ''ஹலோ, எய்ட், திரி, ஃபோர், டூ, ஒன், ஸெவன்''.

மீண்டும் மணி.

''ஹலோ—ஏர் லைன்ஸா—டில்லிக்கு டிக்கட் இருக்கா? எத்தனை மணிக்கு—ஒன்று இருபதுக்கு கிளம்புதா? தேங்க்யூ.''

பக்கத்தில் இருக்கும் உண்டியலில் பதினைந்து பைசாவைப் போட்டுவிட்டு வெளியில் வருகிறேன். கதவு சாத்திக் கொள்கிறது. பச்சை வெளிச்சம். 'நீங்கள் உள்ளே வரலாம்' என்று விளக்கு எரிகிறது.

ஒரே வெயில். துருத்தி வைத்து தணலை மேலே ஊதுவதைப் போல வெயில் தகிக்கிறது. பெரியம்மை கொப்புளங்களைப் போல உடம்பெல்லாம் வியர்வை முத்துக்கள். சட்டை முதுகோடு ஒட்டிக் கொண்டுவிட்டது. ரத்த வியர்வை. நெற்றி வியர்வையை வழித்துவிட்டால் கீரைப் பாத்திக்கு நீர்பாய்ச்சிவிடலாம். தார் ரோட்டில் எங்கே கீரை விதைப்பது? புஞ்சையில் நான் சிறுவனாய் இருந்தபோது விதைத்த கீரை இப்பொழுது முப்பது வருஷங்களுக்குப் பிறகு பசுமையாய் முளைத்திருக்கிறது. அதைப் பறித்து நாளைக்கு மசித்துவிடலாம்.

மவுண்ட்ரோட்டில் ஒரு குடிசை. மிக அழகாக புத்துலக உத்திகளை எல்லாம் பயன்படுத்தி அமெரிக்கா ரஷ்யா எல்லாம் சென்று திரும்பின கட்டிடக்கலை நிபுணர்கள் கூட்டு முயற்சியில் உருவாக்கி இருக்கிறார்கள். வாசலில் ''இண்டியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன்' என்ற போர்டு குழந்தை எழுதும் எழுத்து வடிவத்தில் எழுதித் தொங்குகிறது. படியில் அடியெடுத்து வைக்கிறேன். உள்ளே போகலாமா என்ற தயக்கம்.

''கெட் இன்...கெட் இன்.''

''டில்லிக்கு என்ன டிக்கெட்?''

''நூத்திப் பத்தொன்பது ரூபா எட்டு பைசா?''

''எட்டுப் பைசா என்னய்யா எட்டு பைசா? கொசுறா?''

''சரி, ரவுண்டா கொடுங்க''.

''ரவுண்டுன்னா 119 ரூபா 5 பைசாவா?''

''உங்க இஷ்டம்''.

''நூத்திப் பத்தொன்பது ரூபாய்தான் தருவேன். கொடுப்பியா?''

''சரி கொடுங்க...எட்டு பைசாவை ரைட்டாஃப் செஞ்சுடறேன்''.

பையிலே கையை விட்டேன். பாம்புப் புற்றுக்குள்ளே கையைவிட்டால் ரொம்ப சுகமாய் இருக்கும். ஜிலு ஜிலு என்று பேரானந்தம் உடம்பில் ஏறும். நித்திரை. சுக துக்கமற்ற நித்திரை. மூட்டைப் பூச்சிக் கடியில்லை. என்ன தொல்லையிது. தோள் பட்டை வரையில் கை உள்ளே போகிறது. மேலே போக கை நீளமில்லை. அட ஆண்டவனே? என்னமோ கையில் தட்டுப்படுகிறது. ஏதோ கடித்ததுபோல இருந்தது. வெடுக்கென்று வெளியில் இழுக்கிறேன். பெண்டாட்டி கழுத்துச் சங்கிலி.

''இது ரெண்டு பவுனய்யா?''

''பணமா கொடுங்க சார்''.

''இது பணமில்லையாங்காணும்? பவுனய்யா பவுன். ரெண்டு பவுன். இருபத்திரெண்டு காரட். மாமியார் வூட்டுலே செஞ்சு போட்டது.

''........''

''என்னய்யா ஊமை மாதிரி உட்கார்ந்து இருக்கிறீர்? எங்க அம்மா செய்தது இல்லைங் காணும், மாமியார் வூட்டுலே செஞ்சது. பதினாறு காரட் இல்லே ஸ்மக்ளிங் கோல்ட். திருட்டுத் தனமா ஆசாரியை அடுப்பங்கரையிலே கொண்டு வந்து செய்யச் சொன்னது.''

''........''

''கொஞ்சம் இமைச்சுப் பாருங்க. பயமா இருக்குது. பொணமும் தெய்வமும்தான் கண்ணை இமைக்காது. நீ பொணமா இல்லை தெய்வமா சொல்லுங்க? எனக்குப் பயமா இருக்குது. ஓகோ... பதினாறு காரட்டுன்னு சந்தேகமா? அதான் மாமி யார் செஞ்சதுங்கிறேனே. பதினாறு காரட் டுன்னு அவ எனக்குப் பெண்டாட்டி இல்லேங் காணும் அவ அம்மாவுக்கு மக!''

நகையை வாங்கிப் பையிலே போட்டுக்கிட் டான். ரெண்டு தாளை எடுத்தான். அதை வெட்டி இதிலே ஒட்டு. இதை வெட்டி அதிலே ஒட்டுன் னுன்.

''என்னுய்யா இது?''.

''டிக்கட்''.

''இதுதான் டிக்கட்டா?''

''ஆமாம்.''

'ஆட்டைத் தூக்கி மாட்டுலே போடு. மாட் டைத் தூக்கி ஆட்டிலே போடுங்கறதுதான் டிக் கட்டா ?

'ஆமாம்.'

'இதை நான்தான் செய்யணுமா?'

'ஆமாம்.'

'நீ செஞ்சுக் குடுத்தா என்ன ?'

'நீதானே ப்ளேனுக்குப் போகணும் ?'

'ஆமாம்.'

'அப்போ ஒட்டு.'

அட தெய்வமே! அதில் பாதியை வெட்டி இதிலே ஒட்டுகிறேன். இதில் பாதியை வெட்டி அதிலே ஒட்டுகிறேன்.

'சரியாப்போச்சா ?'

'சரிதான்'

'இப்போவே வயசு முப்பது அய்யா...இன்னும் எத்தனை வருஷம் காத்துக்கிட்டு இருக்கணும், ப்ளேனுக்கு நேரம் ஆச்சா.'

'இன்னும் நாப்பது நிமிஷத்திலே ப்ளேன்'.

'முப்பது வருஷமா காத்துக்கிட்டு இருந் தேனே இன்னும் நாப்பது நிமிஷந்தானு ?'

'ஓடு ஓடு. நேரமாச்சு. ஓடு'

'இங்கேருந்து ஏரோட்ரோம் வரைக்குமா ?'

'இல்லே...வழியிலே டாக்சியெ புடிச்சுக்க.'

ஓடுகிறேன், வேட்டி அவிழ்ந்து போச்சு...ஒரு முனையை கையிலே புடிச்சுக்கிட்டு ஓடுகிறேன்.

'டாக்சி! டாக்சி!

நிறுத்தாமே போருனே! இன்னும் ஓடுவோம்' வழி குறுகுமே'

'டாக்சி...டாக்சி!'

பய நிறுத்த மாட்டானு? வேட்டி அவுந்து தரையிலே புரளுது.

'டாக்சி. டாக்சி'

கண்ணெல்லாம் ரோட்டுமேலேயா? அட போகட்டும். காதெங்கே போச்சு...அடைச்சுப் போச்சா ..மனிதாபிமானமே மரத்துப் போச்சா ...இங்கே ஒருத்தன் காட்டுக்கத்தலா கத்தறது காதிலே கேக்கலையா ?'

'டாக்சி ..டாக்சி'

பசங்க நிறுத்த மாட்டானுங்க...அவன் அவன் பாடு அவனவனுக்கு. நிறுத்த மாட்டானுங்க. வேட்டி அவுந்து ரோட்டிலே போச்சு ..அட போகட்டுமே போனு போகட்டுமே ..ப்ளேனே போகப்போகுதாம் வேட்டி போனுக்க என்னவாம் ...'

'டாக்சி...டாக்சி'

எனக்குப் பின்னே வந்து எத்தனை பய முன்னே ஓடிப்பூட்டான். என்னை ஏத்திக்கிட்டுப் போனு என்ன ? குடியாமுழுகிப்பூடும் ? சும்மாத் தானே போருன். அவன்கிட்டே கார் இருக்குங் கற துணிச்சல்லே போருனு?'

'டாக்சி டாக்சி'

அவனுங்க எங்கே நிறுத்தப் போருனுங்க... முப்பது வருஷம்—இருபது நிமிஷம் ஆச்சு. நேரம் குறுகிப் போச்சு, நேரம் குறுகினு வழியும் குறு கணும் இல்லே ..ஆனு வழி குறுகல்லியே. நீண்டுக் கிட்டில்லே போகுது. குறுக்கு வழியாக போனுல் என்ன ?

புஞ்சையிலேருந்து ஆக்கூருக்குப் போகிற பாதை குறுக்குவழி. நிலமெல்லாம் வெடிச்சுக் கிடக்கு. எலிபுடிக்க வரப்பெல்லாம் வெட்டிக் கிடக்கு. புழுதி உழுத நிலம் கட்டியும் முட்டியு மாய்ப் பரவிக்கிடக்கு. வரப்பிலே துவரை வெட்டிய அடிக்கட்டை ஈட்டி ஈட்டியா நீட்டிக் கொண்டு நிக்குது. செருப்புக் கிழிந்து போச்சு, ரத்தமும் சதையுமா வழியுது. பக்கத்திலே பெரிய திடல். ஸ்பெயின் தேசத்துக் காளை விளையாட்டு நடக்குது அங்கே. காளையை ஈட்டியாலே மேலெல் லாம் குத்தி இருக்கான்கள். ஈட்டி குத்திக் கொண்டு மேலே தொங்குது. எதிரிலே நின்றுக் கிட்டு கலர்துணியே காண்பிச்சு மிரட்டருன். இதுவா மீனம்பாக்கத்துக்குப் போறபாதை? இது ஆக்கூர் பஸ் ஸ்டாண்டுக்குப் போகிற பாதை யில்லையா ? இதிலே போனு பொறையார் பஸ்ஸைத்தானே புடிக்கலாம். இல்லே... இல்லே இது குறுக்குப் பாதை. மீனம்பாக்கம் இன்னும் தொலைவில் இல்லே. தெரியாத பாதையிலே போறதைவிட தெரிஞ்ச பாதையிலே போறது நல்லது இல்லையா ? போற இடத்துக்கு சீக்கிரம் போகலாம். மீனம்பாக்கம் ரொம்பத் தொலைவில் இல்லே. முப்பது வருஷம் முப்பது நிமிஷம் ஆச்சு

'டாக்சி ..டாக்சி'

எங்கே போருனுங்கு இப்படி 'யோவ் நான் ப்ளேனுக்குப் போகணும் ஏத்திக்கிட்டுப் போங் கய்யா !'

'போய்யா...போய்யா கிண்டிலே ரேசய்யா!'

'இந்த அர்த்த ராத்திரிலேயா ?'

'ஆமான் யா ரேசு...நேரமாச்சு போறேன்'

'நிறுத்துங்கய்யா நானும் வரேன், மீனம் பாக்கத்திலே கொண்டு விட்டுடுங்க.'

'போய்யா போய்யா...கிண்டிலே ரேசய்யா'

'ரேசுன்னு என்னய்யா...இப்பிடி குடல் தெரிக்க ஓடுறே. குதிரையா ஓடுது...இல்லே நீயே ஓடுறேயா ?'

'பணம் கொட்டிக்கிடக்குது. அள்ளிக்கிட்டு வரப்போறேன்.'

'பணமா?'

'என்னய்யா வாயைப் பொளக்கிறே. நீயும் ஓடிவா. அள்ளிக்கிட்டு வரலாம்.'

'எப்பிடியய்யா பணம் கொட்டிக்கிடக்கும், குதிரை கொள்ளைத்தின்னுட்டுப் பணம் பணமா லத்தி போட்டிக்கிட்டே ஓடுமா ?'

'ஆமான்னு வைச்சுக்க...பணம் கொட்டிக் கிடக்குது. கறுப்புக்குதிரை யில்லே ஓடுது அங்கே'.

'டாக்சி டாக்சி. காரைப்புடிச்சுக்கிட்டே நானும் வரேன்யா ?'

'டாக்சி டாக்சி.'

முப்பது வருஷம் முப்பத்தொன்பது நிமிஷ மாச்சு. இன்னும் ஒரே நிமிஷம். ஒரே ஒரு நிமிஷந் தான். மீனம்பாக்கம் தொலைவில் இல்லே. ப்ளே னைப் புடிச்சுடலாம்.

'டாக்சி டாக்சி.'

நாயைப்போல இறைக்குது, கண்ணை உருட் டுது.

அதோ...அதோ...ஒரே உந்தல். ஒரே ஓட்டம்.

கொய்ங்குன்னு சப்தம் காதைத் தொளைக் குது. அடக்கடவுளே ப்ளேன் கிளம்பிப் போச்சா எத்தனை வருஷமா ஓடுறேன். முப்பது வருஷம் நாப்பது நிமிஷம் அதுக்குள்ளே ஆச்சா, தலைக்கு நேரே...மேலே...மேலே கொய்ங்கின்னு பறக்குதே கண்ணுக்குத் தெரியுதே.ஏணிவெச்சாலும்இனிமே எட்ட முடியாதே. அடக்கடவுளே...மேகத்துக் குள்ளே பூந்து மறைஞ்சு போச்சே.

கண்ணை இருட்டுது.காதை அடைக்குது.நாக்கு வரண்டு போச்சு. இமையைப் பாரமாய் அழுத் துது வாழ்வு. இமைக்கதவை நீக்கி வெளியிலே பார்க்கிறேன்.' இருட்டு...ஒரே இருட்டு. ப்ளே னோட சத்தம் அடிவானத்தில் போய் அழுந்திப் போச்சு.

அடக்கடவுளே ! இதற்குக் கூடவா நான் கொடுத்து வைக்கவில்லை. நான் அன்றாடம் காய்ச்சி. அவனெல்லாம் குதிரிலே மொத்தமாய்க் காய்ச்சிக் கொட்டிக்கொண்டு வைக்கோல் சுருளை யைப் பிடுங்கிவிட்டு வாய்வைத்துக்குடிக்கிற பயல் களா ? அவன் கடைவாயில் ஒழுகுகிறதை நீ நக்கிக் குடிக்க அனுமதி கொடுத்தானா ? நீ அவன்களுக்கே துணை போகிறாயே !

எனக்கு யார் துணை ?

ஐரிஷ் வானவீரன் தன் சாவைக் காண்கிறான்

W. B. யேட்ஸ்

எனக்கு தெரியும் எங்கோ முகிலிடையே
என்விதியைச் சந்திப்பேன் என்று.
நான் தாக்குவோரை வெறுக்கவில்லை;
காப்போரை விரும்பவில்லை.
என் நாடு கில்கார்ட்டன் கிராஸ்;
என் நாட்டார் கில்கார்ட்டனின் எளியோர்.
அவர்களுக்கு வரக்கூடிய எம்முடிவும்
இழப்பைத் தராது; இருப்பதைவிட
மேலும் மகிழ்வைத் தராது,
சட்டமோ, கடமையோ,
பொது மக்களோ, கைதட்டும் கும்பலோ
என்னைப் போரிடச் சொல்லவில்லை.
என்னை ஏதோ ஒரு மகிழ்ச்சி
தந்த தனிமை உணர்ச்சி
வானிடை இடிக்குத் துரத்திற்று
நான் எல்லாவற்றையும்
மனதிற்குக் கொண்டுவந்து
சீர்தூக்கிப் பார்த்தேன்;
வரும் ஆண்டுகள் வெறும் பாழ்மூச்சாய்,
வெறும் பாழ்மூச்சாய் சென்ற ஆண்டுகள்
எனக்குத் தோன்றின
இவ் வாழ்வோடு
இச் சாவோடு
அவற்றைப் பார்த்தபோது.

தமிழாக்கம்—செல்வம்

ஒளிக்கு ஒரு இரவு

தர்மு சிவராமு

காக்கை கரைகிறதே
பொய்ப்புலம்பல் அது

கடலலைகள் தாவிக் குதித்தல்
போலிக் கும்மாளம்.

இரும்பு மெஷின் ஒலி
கபாலம் அதிரும்
பஞ்சாலைக் கரித்தூள் மழை
நுரையீரல் கமறும்
அலமறும் சங்கு இங்கே
உயிர்ப்புலம்பல்
தொழிலின்
வருவாய்க் கும்மாளம்,

லாப மீன் திரியும்
பட்டணப் பெருங்கடல்
தாவிக் குதிக்கும்
காரியப் படகுகள்
புரோக்கர் அவர்கள்

இயற்கைக்கு ஓய்வு ஓயாத
பகல் சலித்த அதன்
பேரிரவு.

தமிழன் சிந்திக்க

(168-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் குருடர்களாக இருப்பவனாக நான் பேசவில்லை. இன்றைய தமிழகத்தை கொஞ்சம் சுற்றிப்பார்க்க ஏற்பட்ட அநுபவம், உணர்வு, இவைகளைக் கொண்டு பேசுகிறேன். இதுவரை சில்லறைகளை மட்டும் புழங்கியவர்கள் கையில் நோட்டுகளைப் பார்க்கிறோம். தனி நோட்டுகளை புழங்கியவர்கள் கையில் நோட்டுக் கத்தைகளைப் பார்க்கிறோம். நகரங்களிலும் சரி, கிராமங்களிலும் மக்கள் தங்கள் பை, மடிகளிலிருந்து கொஞ்சம் தாராள மாகவே செலவழிக்கிறார்கள். இதெல்லாம் பொது வாக.

தமிழ்நாடு வளம் பெருகவேயில்லை என்று ஒரு வன் சொன்னால் 'குருட்டுப் பயலே' என்பேன். ஆனால் இவ்வளவும் ஏற்பட்டும் தமிழகத்தில் இன்று நல்ல வாழ்வை காணவில்லை. என் பார்வை பூவிழுந்த பார்வை என்று ஒதுக்கிவிடக் கூடாது நீங்கள். இதை எழுதுவதெல்லாம் நான் சிந்திப்ப தாகவே கருதவேண்டும். நாம் சேர்ந்து சிந்திப்ப தாக கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். உங்களில் ஒருவனாக நான் உரத்துப்பேசஆரம்பித் திருப்பதாக நீங்கள் கொள்ளவேண்டும். என்னைப் போல் சிந்திக்கிற பேசுகிற உடன்பாட்டுக்காரர் களையும் நான் அங்கங்கே பார்க்கிறேன். எதிர் மறைக்காரர்களையும் நான் பார்க்கிறேன். அதெல் லாம் இருக்கட்டும். என் மனசுக்குள்ளே உளைந்து கொண்டிருந்த நினைப்புகளுக்கு இன்று வடிகால் கிடைத்த மாதிரி வெளியிட இந்த ஒரு மாதத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள்தான் உந்துதல் தந்தன. ஒரு உள்ளங்கை, உடம்பு முழுவதையும் ஒரே அடி யில் வீழ்த்த முற்பட்ட காரியம் என்னை உலுக்கி விட்டது. உள்ளங்கையகல நாடு பாகிஸ்தான். அது நம் உடலிலிருந்து பிரிந்துவிட்ட ஒன்று என்று பழைய உறவு பேசி, நட்பு அபிமானம், அன்பு, ஆதரவு என்றெல்லாம் இன்று இந்த நிலமையில் பழமையும் தத்துவமும் பேசி நம்மை இனியாவது ஏமாற்றிக் கொள்ளவேண்டாம். பாகிஸ்தான் இந்தியாவின் வயிற்றிலிருந்து ஜனித்து தொப்புள் கொடி அறுகப்பட்டு தாய்வேறு சேய்வேறான நாடு.அதன் பசியும் ஆசாபாசமும்வேறே. தாய்க்கு உவப்பாக அது நடக்கும் என்பது இதுவரையிலும் கனவு; இனியும் கனவுதான். ஆகவே உலகத்தில் உள்ள எத்தனையோ அயல் தேசங்களைப்போல இதுவும் ஒன்று அவ்வளவுதான். விநாடிக் கணக்கில் உலகத்தை சுற்றிவர முடிகிற இந்த நாட்களில் அண்டையாவது அயலாவது? எதுவும் அண்டை தான். தூரம் என்பதுக்கு உள்ள முக்யத்துவம் குறைந்துவிட்டது. பழைய கணக்கு செல்லாது.

தமிழகத்தில் நல்வாழ்வைக் காணவில்லை என்று சொல்லிவிட்டு எங்கோ போய்விட்டேன். அதாவது வ. ரா. குறிப்பிட்ட வசந்த காலத்தை இன்று சுதந்திரம் பெற்றபதினேழு ஆண்டு களுக்குப் பின்னும் பார்க்க முடியவில்லை என்கிறேன். வ. ரா. சொன்னார்:—'வாழ்க்கை முழுவதும் வசந்த காலமாகவே இருக்கலாகாதா? இருக்கலாம்; ஆனால் மனிதன் தனது சின்ன புத்தி யினால் உவகத்தையும் உயிர்களையும் பாழாக்கி வருகிறான்' என்று. இந்த வரிகளைத்தான் இன்றைய தமிழகத்துக்கு சமர்ப்பிக்கத் தோன்றுகிறது. அதோடு அவரது வரிகளான, 'வசந்த காலத்தை விபரீத காலமாகச் செய்யும் மனிதப்பதர்கள் எப் பொழுது காற்றில் பறப்பார்களோ' என்ற கேள் வியையும் இன்று தமிழகத்தைப் பார்த்துக் கேட் கத் தோன்றுகிறது. தமிழகத்தில் இன்று அரசி யல், சமூகம், கல்வி இலக்கியம், சினிமா, நாடகம் ஆகிய துறைகளின் இன்றுநடக்கிற பதர்க்காரியங் கள் என்று ஒருவன் சொன்னால் இந்த அத்தனை துறைக்காரர்களும் அவன் மீது சீறிவிழுவார்கள். உள்ளம் கசப்பாகத்தானே இருக்கும். இந்த பதி னேழு ஆண்டுகளாக வளர்ந்து வரும் நிறைவுகளு டன் குறையும் அதே அளவுக்கும் மேலாகவே வளர்ந்து பயிருக்குமேல் மண்டிய களையாக நிறை யையும் அமுக்கி ஓங்கிவிட்டதின் விளைவுதான் இந்த ஒருமாத காலத்தில் நாம்பார்க்கிற, அனுப விக்கிற நிலை ஏற்பட்டதுக்கு காரணம். அனுபவிக் கிற நிலை என்கிற போது யுத்தத்தினால் ஏற்பட்ட உயிர்ச்சேதம், பொருள் அழிவு இவைபற்றி குறிப் பிடவில்லை. போரில் இறங்காத வரை இவைபற்றி பயம் இருக்கும். தவிர்க்க அக்கறை இருக்கும். நாம் அப்படித்தான் இனைத்து வந்திருக்கிறோம். அண்டை தேசங்கள் இரண்டும் ஆண்டுகளாக போர்க்குரல் எழுப்பி'சண்டைக்கு அடிப்படி மாடு பிடி' என்கிற ரீதியாக நமக்கு தொல்லைகள் கொடுத்து வந்தும் யானைமேல் உட்கார்ந்த கொசு வாக மதித்து எத்தனை ஆண்டுகளை அலட்சியப் படுத்தி வந்திருக்கிறோம். தூங்கினோமா, தக்கபடி கவனிக்க வில்லையா, தெரிந்து சும்மா இருந்து விட் டோமா, நம்பி மோசம் போனோமா? இப்படி ஆராய்வதெல்லாம் சிந்திப்போன பாலாக பயன் படாவிட்டாலும் பின்திரும்ப வருவதுக்கு எச்சரிக் கையாக இருக்க உதவும் அல்லவா?

இப்போது போர்வந்து விட்ட பிறகு நஷ்டம் என்றாலும் சரி, கஷ்டம் என்றாலும் சரி எதுக்கும் நாம் தயாராக இருப்பது மட்டும் இல்லை, அவை களை மிதித்து மேலே நின்று நம்வாழ்வை நீடித்துக் கொள்ள விரும்பும் ஆசையுடன் தெம்புடன் நில மைக்கு ஈடுகட்டும் ஆண்மை கொள்ளவேண்டும். இந்த ஆண்மையை இப்போது திடீரென நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டி இருக்கிறது இந்த ஆண்மை முன்பு நமக்கு இருந்தது. இந்த பதி னேழு ஆண்டுக்காலத்தில் கழுதை தேய்ந்து கட் டெறும்பாக ஆன கதையாக ஆகிவிட்டது. 1920 லிருந்து 1948 வரை சத்தியாக்ரகியை உரு வாக்கி சாதனை காட்டிய காந்தியை இப்போது நினைத்துக் கொள்கிறேன். ஒரு சத்யாக்ரகியை, இம்சைக்கு எதிராக அகிம்சையை ஆயுதமாகக் கொள்ளும் ஒரு வீரனை தயாரிக்க மகாத்மா புடம் போட்டு எடுத்தது சரித்திரம். அந்த சத்யாக்ரக நெஞ்சை அன்று காட்டியதுக்கும் இன்று காட்டப்

படுகிற நெஞ்சுக்கும் எவ்வளவு வித்யாசம். தனி மனிதரில் நம்பிக்கை வைத்த மகாத்மா தனி மனிதர்களை உருவாக்க முற்பட்டார். சுதந்திரத்துக்குப் பின் தனிமனிதன் பின்தள்ளப்பட்டு, கட்சி விசுவாசம்—அது தப்புச் செய்தாலும் ஆதரவுதரக் கடமைபட்டிருத்தல். கொள்கை ஆதரவு—தனக்கு சரியாகப் படாவிட்டாலும் ஒப்புக்காக அல்லது சமயசந்தர்ப்பத்துக்காக தன் தன் சவுகர்யத்துக்காக ஒத்துப்பாடுவது, தனிமனிதன் செய்ய வேண்டி இருப்பதும் உண்டு என்ற பிரக்ஞையே இல்லாமல் போய் அரசாங்கத்திடம் தன் செயல் சக்தியை தானம் செய்து விட்டு அரசாங்கம் பிடிக்காததை செய்தால் அதை ஏற்கவும், மனம் இல்லாமல் அதை மறுக்கவும் செயலீடும். மனமும் இல்லாமல் முக்கி முனகிக் கொண்டிருப்பதும் எல்லாம் ஏற்பட்டுவிட்டது. அரசாங்கமோ தனி மனிதன் தான் சமூகத்தின் உயிர்நாடி என்பதை மறந்து, ஆட்டுமந்தையாக மதித்து 'யானைக்கு அற்றம் குதிரைக்கு குற்றம்' என்றபடி நாட்டில் நிலைக்கு ஏற்பட்டு க்ஷேமநலன் கருதிய வழிவகைகள் காணமல் அகலக்கால்வைத்து கொள் பிடிக்க முடியாமல் போகிறபடி போகட்டும் என்ற ரீதியில் போகிற திட்டங்களை அடாபிடியாக வற்புறுத்தி ஒரு இடத்தில் பொத்தல் அடைக்க இன்னொரு இடத்தில் பொத்தல் ஏற்படுவதை சரிசெய்யத் தெரியாமல் ஏற்படுத்திய பிடிப்பு இல்லாத ஒரு நிலை.

இதெல்லாம் சேர்த்து நல்ல வாழ்வு தமிழகத்தில் காணவைக்க வில்லை என்று சொன்னேன். இவைகளை எல்லாம் ஆராய்வது பலதுறை சிந்தனையாளர்களின் கடமை அதோடு நல்ல வாழ்வு இனியாவது காண வழிவகை ஆராய்வதும் அவர்கள் பொறுப்பு. வெறுமனே நடந்ததுக்கு குறை கூறும் கண்டனம் மட்டும் போதாது, நடந்ததை எல்லாம் சரியானது என்றுஅடாபிடியாகப் பேசும் பேச்சும் தப்பு. இன்று இருக்கிற நம் நிலை அபாயகரமான நிலை. இதைவிட முன் என்றும் இருந்திருக்க முடியாதோ என்னவோ? நாம் இனியாவது கடைப்பிடிக்கிறதை வைத்துத்தான் நம் எதிர்காலம். நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும். என்னோடு சேர்ந்து சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★

அன்று சொன்னது இன்றைக்கும்—

படர்ந்து எரிய விடாதே !

எங்கு பார்த்தாலும் படர்ந்து எரிகிற வாழ்க்கைதான் நம் கண்களை குத்தித் தொலைக்கிறது. காரணம் என்ன? ஜனசமூக வாழ்வு என்ற விளக்கிலே எண்ணெயும் திரியும் சரியாக இல்லை. தன் கொண்டிதனமாக லட்சிய மொன்று மில்லாமல் ஒவ்வொருவரும் வாழ்வது என்று ஏற்பட்டு விட்டால், நமது தனிவாழ்வும் பொதுவாழ்வும் ஏன் படர்ந்தெரியாது?

ஜனசமூக வாழ்வு விளக்கு அவியாமல், உடையாமலிருக்க வேண்டுமானுல், ஒவ்வொருவரும், ஒவ்வொரு தலைமுறையும் கொஞ்சம் எண்ணெய் திரி போட்டாக வேண்டும் நமது பொதுவாழ்வுக்கு புதிது புதிதாக எண்ணெய் திரிபோட வேண்டும் என்ற எண்ணம் நமக்கு வேண்டாமா?

தமிழ் இலக்கியத்திலும் இந்தப் படர்ந்தெரிகிற சங்கதி மும்முரமாய் நடந்து கொண்டு வருகிறது. பழைய பேச்சையே எவ்வளவுதூரம் அபத்தமாக புளித்துப் போகும் எல்லை வரையில் பேச முடியுமோ, எழுதமுடியுமோ அவ்வளவையும் செய்துகொண்டு வருகிறோம் ரொம்பக் கேவலம்!

—வ. ரா.

'படர்ந்து எரிகிறதே' கட்டுரையில்

(1934ல்)

ரசனையைப் பாழாக்கும் பேனுக்காரர்கள் !

ஜனங்களுடைய கேவல மனோபாவங்களுக்கேற்றபடி 'குழைஞ்சான் பாட்டுப்பாடிக்கொண்டு பொதுஜனங்களின் ரஸனைத் திறமையை வரவர பாழாக்கி விடும் பேனுக்காரர்களும் உண்டு. மக்களின் ரஸனைத்திறமையும் தராதர அறிவும் நைந்து போகாதபடி பார்த்துக் கொள்ளும் பெரிய பொறுப்பு இக்காலத்தில் பத்திரிகைகளின் வசமே யுள்ளது. பத்திரிகைகளின் மூலம் இலக்கியத்தையே சிருஷ்டிக்க முடியுமென்பது மேனுடுகளின் நவீன அனுபவம். அத்தகைய முயற்சியை இப்பொழுது தான் தமிழ் நாட்டில் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். தமிழ் நாட்டில் இப்போது தான் படிப்பவர்களின் தொகையும்அதிகமாயிருக்கிறது. இந்த சமயத்தில் 'உயர்ந்த நோக்கத்தோடு எழுதுகிறோமா' என்பதை பேனுக்காரர்கள் கொஞ்சம் கவனிக்கவேண்டும். எழுதுகிறவர்கள் செவ்விய நோக்கோடு எழுதுகிறார்களா வென்பதை வாசகர்களும் கொஞ்சம் கவனிக்கவேண்டும், லட்சியம் சிறப்புற்றதானுல் அது இலக்கியம் தானே.

—சங்கு. ஸுப்ரமண்யன்

(சுதந்திரச் சங்கு)

(கொஞ்சம் கவனிக்கவேண்டும்—1934)

(166-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டி ஏற்படுகிறது. அன்று இதே நிலைதான். சுதந்திரம் பெறத் துடித்த நாட்கள். இன்று பெற்ற சுதந்திரத்தை காக்கத் துடிப்பு நாட்கள். அன்றய துடிப்பு நாட்களிலே எழுத்தாளன் என்ன நினைத்தான், என்ன எழுதினான்? அவன் குறிக்கோள் எதாக இருந்தது? அதுக்கு பதில் இது தான். சுதந்திரச்சங்கு காந்தி, மணிக்கொடி, நவசக்தி இவைகளின் அன்றய எழுத்துக்கள் கல்லில் செதுக்கப் படவேண்டியவை. மனிதனை தெய்வமாகஆக்க தம் பேனாவை ஓட்டியவை அப்படிஆக்க முனைந்த பேனாக் காரர்களை தோற்றுவித்தவை. இது இலக்கிய சரித்திரம், இன்று விகடன், கல்கி, குமுதம் ராணி இவைகளின் எழுத்துக்கள்? இவைகள் தோற்றுவிக்கும் பேனாக்காரர்கள்? நீங்கள் பார்க்கிறீர்கள், படிக்கிறீர்கள். உங்களுக்கு படுகிறதென்ன?

அன்று தி. ஜ. ர. சுதந்திரச் சங்குவில் 'வளர்ச்சியும் முன்னேற்றமும் உண்டாக்கும் ஆசிரியர்களே இப்பொழுது தமிழுக்குத் தேவை. எழுத்துக்கு ரூ. அ பை. சில்லறை மாற்று ஒன்றையே நோக்கமாகக் கொண்ட ஆசிரியர்களல்ல' என்று எழுதினார். வ. ரா. சங்கு சுப்ரமண்யன், டி. எஸ், சொக்கலிங்கம், திரு. வி, கலியாணசுந்தர முதலியார் ஆகியோர் இதேபோக்கில் தாங்களும் எழுதி எழுத்தாளர்களையும் எழுதச் செய்தார்கள். இன்று அந்த எழுத்தாளர்கள். ஆசிரியர்கள் முன்னணியில் இல்லை. சென்றவர்கள் போக இருப்பவர்கள் கிழண்டு விட்டார்களா அல்லது பத்தாம் பசலியாக கருதி அவர்களை பின் தள்ளிட்டதா இந்த தலைமுறையும் இந்த நாளத்து மனப்பான்மையும்? எதானாலும் சரி அவர்கள் நம் முன் நிற்கவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அவர்கள்வழிபின் பற்றி இன்று மரபு ஏற்படுத்துகிறவர்கள் யாராவது அந்த இடங்களை இட்டு நிரப்பி இருக்கிறார்களா? அவர்கள் தொனிக்கு மேலாக பேசுகிறார்களா? இல்லை, இல்லை, இல்லை. யாருமே இல்லாதபோது தி. ஜ. ர. குறிப்பிட்ட எழுத்தாளன் எங்கே பிறக்கப் போகிறான்?

இதை யெல்லாம் சொல்லும்போது எங்கெல்லாமோ போய் குத்தும் உறுத்தும் ஆத்திரமூட்டும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் சொல்லித் தான் தீரவேண்டும் இன்றாவது. 30-48 சுதந்திரக் கிளர்ச்சிக் காலம். தி. ஜ. ர. குறிப்பிட்ட எழுத்தாளர்களை தந்தது. 48-65 சுதந்திரவாழ்வுக் காலம் இன்று வரை தரத் தவறிவிட்டது அது மட்டுமல்ல அந்த முதல்பகுதிக் கால எழுத்தாளர்களையும் மறந்து விட்டது. அதாவது சு. சங்கர சுப்ரமண்யன் தன் கட்டுரையில் குறிப்பிட்டது போல், சமீபப் பழமையை உணர மறுத்துவிட்டது அசல் முன்னோடிகளின் பெருமைகளை கண்ணெடுத்துப் பார்க்க மறுத்து விட்டது. இதன் விளைவு! எழுத்து வீர்யம் இழந்தது. ச. து சுப்பிரமண்ய யோகியார் (சுதந்திரசங்கு கட்டுரை 1934) அன்று. 'பேனா பிடித்தவர்களே நீங்கள் காலம் கடக்க முடியாத கலைஞர்களாக ஆகாவிடினும் அத்தகைய கலைகளை வருவிக்கத்தக்க வகையிலாவது எழுதக்கூடாதா' என்று கேட்ட மாதிரி, தாங்களும் கலைஞர்களாக ஆக இயலாமல். கலைகளும் வளர வகை செய்ய முடியாத நபும்சகத்தன்மானதாக ஆகி விட்டது. கலைப்பண்பு வளராததால் மனிதப் பண்பும் வளராதநிலை. கலைக்கு மனிதப்பண்பு ஆதாரம் மனிதப்பண்பு கலையின் விளைவு. ஒன்றுக்கொன்று துவந்தம்.

கலை—மனித பண்புக்கு வகை செய்யாத எழுத்து காளான் பூத்துக் கிடக்கிற நிலையில்இன்று அதிர்ச்சியாக ஒரு குலுக்கல் நிலை. மேலுக்கு வீறு பேசினாலும் நெஞ்சிலே பதட்டம். இந்த நிலையில் வ. ரா 1934ல் 'ஜன சமூக வாழ்வு விளக்கு அவியாமல் உடையாமல் இருக்க வேண்டுமானால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைமுறையும் கொஞ்சம் எண்ணெய் திரியும் போட வேண்டும்' என்று சொன்ன மாதிரி, படர்ந்து எரிவதை மாற்ற முயலப் போகிறானா? ந. பிச்சமூர்த்தி 'பாம்பு சட்டை உரித்துக் கொள்வது போல எழுத்தாளன் தன்னை புதுசு படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னபடி தன்னை புதுசு படுத்திக் கொள்ளப் போகிறானா? இதுதான் இன்றய எழுத்தாளன் முன் உள்ள கேள்வி பேனாவின் மகிமையை அவன் உணரப்போகிறானா? உணர்த்தப் போகிறானா? இது சோதனைக்கு உள்ளாகியுள்ள நிலை.

பேனாவின் மகிமை என்கிற போது அபாயகரமானமகிமைக்கும்இடம்இருந்திருக்கிறது. இந்தியா பிளவு பட காரணமாக இருந்ததே ஒரு கவிதான். பிரபல உருதுகவிஞன் மஹமத் இக்பால் 1930க்களில் பஞ்சாப், சிந்து, வங்காளம், ஐக்ய மாகாணம், எல்லைப்புறம் ஆகிய ஐந்து மாகாணங்களையும்சேர்த்து முஸ்லீம் இந்தியா ஆகவேண்டுமென்று கண்ட கவிக்கனவுதான் பாகிஸ்தானை நிஜமாக்கியது பதினெட்டு ஆண்டுகளில். அத்தகைய கவிக்கனவின் விளைச்சலை நாம் அநுபவிக்கிறோம். எழுத்தாளன் பேனாவை எப்படி பிடிக்கவேண்டும் என்பதுக்கு இது ஒரு எச்சரிக்கை. நம் தமிழக பேனாக்கள் இனி என்ன செய்யப் போகிறது?

அன்புள்ள வாசகர்களே,

எழுத்து 'தீபாவளி மலர்' போடும் யோசனையை கைவிட்டு விட்டேன் கால நிலை சரியாக இல்லாததால். அன்பர்கள் மன்னிக்கக் கேட்கிறேன்.

இந்த ஏட்டில் அன்பர்கள் காணும் மாறுதல்கள் 'எழுத்து' தன்னை சட்டை உரித்துக் கொண்டு எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டிருப்பதை காட்டும்.

எழுத்து இனி கடைகளில் கிடைக்கும். அன்பர்கள் தங்கள் ஊர் ஏஜண்டுகளை எனக்கு சிபார்சு செய்து, அவர்களுக்கும் 'எழுத்து'வை சிபார்சு செய்து எழுத்து பெருக உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்

சி. சு. செல்லப்பா

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

1. சொர்க்கத்தில் சம்பாஷணை	வ. ரா.	ரூ.	3-00
2. வசந்த காலம் (கட்டுரைகள்)	,,	ரூ.	3-00
3. பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்)	ந. பிச்சமூர்த்தி	ரூ.	4-00
4. வழித்துணை (கவிதைகள்)	,,	ரூ.	2-00
5. அகல்யை (ஓரங்க நாடகங்கள்)	கு. ப. ரா.	ரூ.	4-00
6. ஆண்சிங்கம் (சிறுகதை)	வல்லிக்கண்ணன்	ரூ.	4-00
7. சில விஷயங்கள் (கட்டுரைகள்)	சிட்டி	ரூ.	3-00
8. சத்யாக்ரகி (சிறுகதைகள்)	சி. சு. செல்லப்பா	ரூ.	4-00
9. மணல் வீடு ,,	,,	ரூ.	4-00
10. கோடை வயல் (கவிதைகள்)	தி. சோ. வேணுகோபாலன்	ரூ.	1-25
11. கனவுப் பறவை (சிறுகதைகள்)	கர்ணன்	ரூ.	2-50

விவரங்களுக்கு எழுதவும்

கிடைக்குமிடம் :—

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

எழுத்து

சந்தா விகிதம்

ஆண்டுச் சந்தா	ரூ.	5-00
வெளிநாடுகளுக்கு	ரூ.	7-00
தனிப்பிரதி		50 பைசா

பிரதி இங்கிலீஷ் மாதம்
முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5

EZHUTTHU

Tamil literary monthly

ADVERTISEMENT TARIFF

INSIDE PAGE

Full Page	15×20 cms		Rs. 80-00
Half ,,	15×10 / 7½×20	,,	Rs. 40-00
Quarter ,,	7½×10 / 15×5	,,	Rs. 20-00
Back cover			Rs. 100-00
Inside covers			Rs. 90-00

Concession for Contract Page

EZHUTTHU

19. A, Pilliar koil St., Madras-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Cenrtal Press, 97, Big Street, Triplicane Madras-5